# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 63
விலை ரூபாய் 30.00

தீபம்–63 | கார்த்திகை இதழ் – 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013



திருமறைக்கல்வி நிலையம்,
இல; 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 2054362


கடவுளே, உலகில் எழுந்தருளும், அதில் நீதியை நிலைநாட்டும். (தி. பா 82: 08 )

## அதிவிஷேட மறைபரப்பு மாதம் - 2019 ஒக்டோபர்

அதிவிஷேட மறைபரப்பு மாதத்திற்கான கூட்டுத்திருப்பலியும் நிகழ்வுகளும் 20.10.2019 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில், அனைத்துப் பங்குகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி எமது மறைமாநில ஆயர் பேரருட்திரு. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது. குருமுதல்வர், திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனர், திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் எமது மறைமாவட்ட இயக்குனர் மற்றும் பங்குத்தந்தையர்கள் கலந்துகொண்டனர்.






அன்றைய தினத்திலே ஒவ்வொரு பங்குகளிலும் இருந்து 03 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு “நான் இயேசுவின் சிறிய மறைதூதுவன்” என்று பொறிக்கப்பட்ட சின்னம் 43 பேருக்கு வழங்கப்பட்டது. அனைத்துப் பங்குகளிலிருந்தும் குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்வை ஒழுங்கு செய்தவர்களுக்கும், கலந்து சிறப்பித்து தமது பங்களிப்பை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளையும் இறையாசீரையும் தெரிவித்துக் கொள்கிறோம்.




அதிவிஷேட மறைபரப்பு மாதத்தையொட்டிய பல நிகழ்வுகள் பங்கு ரீதியாக பெரும்பான்மையான பங்குகளில் சிறப்பிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. பங்கு மக்கள் பங்குத்தந்தையர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.








தகவல் : அருட்பணியாளர் X.I. றஜீவன்
இயக்குனர், திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள்

## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

இடம் : இறை இரக்கத் திருத்தலம்,
அலஸ்தோட்டம் - புளியங்குளம்.

காலம் : 09.11.2019 (சனிக்கிழமை)

நேரம் : மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை



திருகோணமலை மறைமாவட்டத் திருஅவையாக செபத்தில் இணைந்திடுவோம்.

## தேசிய விவிலிய போட்டி முடிவுகள் - 2019



தமிழ்ப் பிரிவு
**விவிலிய பேச்சுப் போட்டி**
செல்வி றிடிம்ஷா ரவிகுமார்
பாலையூற்று (அன்புவழிபுரம்)
கீழ்ப் பிரிவு - 2ம் இடம்

### விவிலிய எழுத்துப்பரீட்சை - கீழ்ப்பிரிவு

செல்வன் அ.டிலுக்ஷன்
பாலையூற்று. (71 புள்ளிகள்)

செல்வி. தி.கவிஷாலினி
பாலையூற்று. (70 புள்ளிகள்)



செல்வன். வி.விதுர்ஷன்
பாலையூற்று.
(71 புள்ளிகள்)

### விவிலிய எழுத்துப்பரீட்சை - மேல்ப்பிரிவு



செல்வன். ஜெ.சதுஷன் எல்மோ
உவர்மலை.
(88 புள்ளிகள்)



செல்வி. ரா.பிரதிக்ஷா
மூதூர் - சகாயபுரம்
(72 புள்ளிகள்)



செல்வி. அ.கேஷா
மெட்லின்
உவர்மலை (86 புள்ளிகள்)

பங்கு பற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக வாழ்வோரின் கடவுள் (லூக் 20:38)

சுயவிழிப்புணர்வுத் தொடர் - 07

## சமநிலை பேணுவோம்!



# இன்னுமா தயக்கம்

இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! திருமலை தீபம் இதழ் வாயிலாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். சென்ற இதழில் சமநிலை காப்பது எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றிப் பார்த்தோம். அதே கருத்தினை இந்த இதழிலும் சற்று ஆழமாகப் பார்ப்போம்.

நம் அனைவருக்கும் முன்மாதிரியான இயேசு தன் வாழ்வில் சமநிலையைப் பேணுவதற்கு மிக முக்கியத்துவம் கொடுத்தார். இயேசு மெய்யாகவே கடவுளும் மனிதருமாக இருந்தார். அதாவது, அவர் முழுமையான கடவுள் தன்மையில் இருந்தார், அதுபோல முழுமையான மனிதத் தன்மையிலும் இருந்தார். எனவே அவர் மனித நிலையையும் கடவுள் தன்மையையும் ஒருங்கே பெற்றிருந்தார். இந்த மனித கடவுள் நிலையில் அவர் சிறப்பான சமநிலையையைப் பேணினார். விவிலியம் நமக்குக் கூறும் உண்மை என்னவென்றால், அவர் பாவம் தவிர மற்ற அனைத்திலும் மனிதரைப் போல இருந்தார். இது அவர், முழு மனித ஆளுமையை அதன் முழு முதிர்ச்சியுடன் பெற்றிருந்தார் என்பதையே சொல்கிறது. அந்த முழுமையான முதிர்ச்சியை நோக்கியே கிறிஸ்தவர்களாகிய நாமும் நம் ஆண்டவர் இயேசுவை மாதிரியாகக் கொண்டு பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இயேசுவின் வழியில் பயணம் செய்ய விரும்பும் நாமும் அவரைப் போன்று சமநிலையை நம் வாழ்விலும் பேணவேண்டும்.

இயேசு தன் வாழ்வில் இறைநிலைக்கும் மனித நிலைக்கும் மிகச் சரியான சமநிலையைப் பேணிவந்தார். ஆண்டவர் இயேசுவைப் பற்றி நற்செய்தியில் பல புதுமைகள் வாயிலாகவே அறிகின்றோம். தன் இறைஇயல்பை அவர் தன்னை நாடி வந்த பலர் நலன்பெறுமாறு பயன்படுத்தினார். அவர் நோயாளிகளைக் குணமாக்குவதைப் பார்த்த யூதர்கள் அவர் அவ்வாறு செய்வதை பெருமளவில் எதிர்த்தனர். ஆனாலும் அவர் பின்செல்லவில்லை. ஓய்வு நாளானாலும் நோயாளிகளைக் குணப்படுத்தினார், அறியாமையில் இருந்த மக்களுக்கு போதித்தார், பேய்பிடித்தவர்கள் பேயை ஓட்டினார். இவ்வாறு தன் இறைநிலையைப் பயன்படுத்தி தன்னை நாடி வந்த அனைவரது தேவைகளையும் பூர்த்தி செய்தார். அதே இயேசு, நாற்பது நாட்கள் நோன்பிருந்து களைத்திருந்தபோது, தன் இறைஇயல்பைப் பயன்படுத்தி கற்களை அப்பமாக மாற்றி உண்பதற்கு அலகை கூறிய ஆலோசனைக்கு செவிமடுக்கவில்லை. அதே போல் இறந்த லாசரை உயிர்ப்பித்த இயேசு, ஏழைக்கைம்பெண்ணின் மகனை உயிர்ப்பித்த இயேசு, பன்னிரண்டு வயது சிறுமியை உயிர்ப்பித்த இயேசு, தான் சிலுவையில் அறையப்பட்டபோது தன்னை தன் இறைஇயல்பின் மூலம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என எண்ணவில்லை. கொடிய சாவுக்கு தீர்ப்பிடப்பட்டபோதும் அவர் அதை ஏற்றுக்கொண்டாரே தவிர, தன் சக்தி என்னவென்று என் எதிரிகளுக்குக் காட்டுவேன் என்று எந்த செயலையும் செய்யவில்லை.

ஒரு இடத்தில் எதிர்ப்புக்களையும் மீறி தன் இறைஇயல்பைப் பயன்படுத்துகின்றார், இன்னொரு இடத்தில், ஆலோசனைகள் கொடுக்கப்பட்டும், தன் இறைஇயல்பை பயன்படுத்த மறுக்கின்றார். இந்த இடத்தில் இயேசு, தன் இறைஇயல்பை எங்கு பயன்படுத்த வேண்டும், எங்கு பயன்படுத்தக்கூடாது என்ற சமநிலையை முழுமையாக உணர்ந்திருந்தார். அதை மிகச் சரியாக செயல்படுத்தினார்.

பழைய ஏற்பாட்டில் யோனாஸ் என்ற இறைவாக்கினரைப் பற்றி நாம் அறிவோம். நினிவே என்னும் நகருக்கு இறைவாக்குரைக்க இறைவன் அவரை அனுப்புகின்றார். நினிவே நகர் மக்கள் மிக மோசமானவர்களாக இருந்தார்கள். எனவே யோனாஸ் அந்த நகரை அறவே வெறுத்தார், அதோடு அதைப் பார்த்து பயந்தார். எனவே அவர் அந்த நகருக்குப் போக விரும்பவில்லை. எனவே அவர் வேறு திசையில் பயணம் செய்கிறார், ஆனால் கடவுள் அவரை விடவில்லை. கடலைக் கொந்தளிக்கச் செய்து, அவரைக் கடலில் விழச் செய்கிறார். கடலில் விழுந்த அவரை ஒரு மீன் மூலமாக நினிவே நகருக்குக் கொண்டு வந்து சேர்க்கின்றார். தன்னை இறைவன் கட்டுப்படுத்தி நினிவே நகருக்கு கொண்டு வந்துவிட்டதால், அவரது குரலுக்குக் யோனாஸ் கீழ்ப்படிகிறார். அந்நகரில் இறைவன் தனக்கு அறிவித்ததை அவர் மக்களுக்கு அறிவிக்கின்றார். அவரது அறிவிப்பானது, 'கடவுள் இந்த நகரத்தை அழிக்கப் போகிறார்!' என்பது தான். இந்த அறிவிப்பை கேள்வியுற்ற அரசன் உடனடியாக மக்களுக்கு ஒரு கட்டாய ஆணை வெளியிட்டு மக்கள் முதல் கால்நடை வரை அனைவரும் உடனடியாக சாக்குடை அணிந்து சாம்பல் பூசி நோன்பிருக்க பணிக்கின்றான், அவர்களும் மனம் திரும்பி நோன்பிருக்கிறார்கள். இப்போது, யோனாஸ் இறைவாக்கினர் இந்த மக்களை அழித்தொழிப்பேன் என்று சொன்ன 'வாக்கு மாறா' இறைவன் அந்நகரத்தை அழிக்கும் நேரத்தை உற்றுநோக்கிக் காத்திருக்கிறார். ஆனால் இறைவன், 'இந்த மக்களை நான் அழிக்கப் போவதில்லை, அவர்களது மனமாற்றத்தை முன்னிட்டு நான் என் மனதை மாற்றிக் கொண்டேன்' என்று கூறுகின்றார். இதைக் கேட்டவுடன், யோனாஸ், "கடவுள் தன் வாக்குறுதியை மறந்துவிட்டாரே! எனக்குத் தெரியும், நீர் இப்படி வாக்கு மாறுவீர் என்று! எனவே தான் நான் இந்த நகருக்கு வரமாட்டேன் என்று கூறினேன். ஆனால், என்னை இங்கே வரவைத்து அவர்களை முன்னிட்டு உம் மனதை மாற்றிக் கொண்டீர்!" என்று புலம்புகிறார். உண்மையில், அந்த நகர் அழிவிலிருந்து தப்பிவிட்டதை நினைத்து அவர் மகிழ்ந்திருக்க வேண்டும். ஆனால், அவர் புலம்புகிறார். இதற்கான காரணத்தை நாம் ஆய்ந்தால், இவர் சொல்வதில் உள்ள உட்பொருளை உணர்ந்து கொள்ளலாம். "என்னை விட வலிமை வாய்ந்த மக்கள் நிறைந்த நகர், என் நாட்டை விட வளமான நாடு, எனவே இந்த மக்கள் என்னை மதிக்க மாட்டார்கள். அவர்கள் என்னை மதிக்க வேண்டுமென்றால், நான் அவர்களை விட பெரியவன் என்பதை நிரூபிக்க வேண்டும்", என்று அவர் நினைத்தார். அவரைப் பொறுத்தவரை அந்த நிரூபணம் தான், கடவுளாம் ஆண்டவர். ஆண்டவரின் பெயரால் வரும் இறைவாக்கினர் என்ற நம்பிக்கையில் தான் அவர்கள் அவரை மதித்து அவர் சொன்னதற்காக நோன்பிருக்கிறார்கள். இப்போது, இந்த நோன்பை முன்னிட்டு கடவுள் தன் முடிவை மாற்றிக் கொண்டால், யோனாஸ் அவர்களுக்கு சொன்ன வார்த்தைக்கு என்ன மரியாதை, அவர் கடவுளிடமிருந்து வந்துள்ளார் என்பதை அந்த மக்கள் எப்படி நம்புவார்கள்? யோனாஸ் அறிவித்த அழிவு கொஞ்சமாவது நடந்திருந்தால், அவரை இறைவாக்கினர் என்பதை அவர்கள் நம்புவார்கள். ஆனால், அவர் சொன்னவை நிறைவேறவே இல்லையென்றால், அவர்கள் அவரை நம்பவே மாட்டார்கள். இந்த எண்ணத்தில் தான், "இந்த இறைவன் தன் வாக்கை இப்படி மாற்றி மாற்றி என் பெயருக்கு பெரிய களங்கத்தை உருவாக்கிவிட்டாரே. நான் இனி இந்த மக்கள் முன் எப்படிச் செல்வேன்?" என்று யோனாஸ் இறைவாக்கினர் கடவுளிடம் சினந்து கொள்கிறார்.

இந்த நிலையில் நாமும், இறைவன் வாக்கு பிறழ்ந்துவிட்டார், அவர் சொன்ன அழிவை செய்யாமல் விட்டுவிட்டார் என்று எண்ணலாம். உண்மையில், இறைவனைப் பொறுத்தமட்டில், தன் வாக்கு நிறைவேறவேண்டும் என்பதை விட, தன் வார்த்தையை மதித்து நோன்பிருந்த மக்கள் வாழவேண்டும் என்பதையே அவர் விரும்பினார். எனவே தன் வாக்கு மாறிவிட்டதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. தன் வாக்குப்பிறழ்ந்ததால், ஒரு வாழ்வு பிறந்துள்ளது என்பதைக் குறித்து இறைவன் மகிழ்கின்றார்.

நம் வாழ்விலும், இதுபோன்ற நிகழ்வுகள் நடந்திருக்கும். நான் அனைவருக்கும் முன் வாக்கு கொடுத்துவிட்டேனே, என்னைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள், என் மதிப்பு மரியாதை என்னாவது? என்ற எண்ணத்திலேயே பல உறவுகளை நாம் இன்று உதாசீனம் செய்து கொண்டிருக்கின்றோம். பெற்ற பிள்ளையாக இருந்தாலும், தன் பேச்சை மதிக்காமல் சென்றதால், 'வீட்டை விட்டு வெளியே போ!' என்று விரட்டி விட்டபின், தானே விரும்பினாலும், அந்தப் பிள்ளையை அழைப்பதை மரியாதைக் குறைவாகவே பல வயதான பெற்றோர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். காரணம், அவர்களுடைய பிள்ளைகள் மீது இவர்களுக்கு பாசம் இல்லையென்பதால் இல்லை, மாறாக பாசத்தை விட கௌரவம், மரியாதை என்ற மாயை பெரிதாக தெரிவதாலேயே ஆகும். நான்குபேருக்கு முன் பல வருடங்களுக்கு முன் அவர் சொன்ன வார்த்தை, அவரை தன் பிள்ளைகளாகவே இருந்தாலும் அவர்களை ஏற்றுக்கொள்ள தடுக்கின்றது. இன்று நாம் நினிவே நகர் நிகழ்வு வாயிலாக அறிந்து கொள்வது என்னவென்றால், நம் வாக்குப்பிறழாமை, நம் வறட்டு கௌரவமாகவே பல நேரங்களில் இருந்துள்ளது. இந்த வறட்டு கௌரவம் என்ற மாயையிலிருந்து விடுபடவேண்டும். அவ்வாறு விடுபட்டால், பல அரிய முக்கியமான உறவுகளை நாம் மிக எளிதாக புதுப்பித்துக் கொள்ளலாம். கணவன் மனைவிக்கிடையேயுள்ள பிரச்சனைகள், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையேயுள்ள பிரச்சனைகள், நெருக்கமான நண்பர்களுடனான பிரச்சனைகள் கூட இந்த வறட்டு கௌரவத்தாலேயே உருவாகியுள்ளன என்றால் அது மிகையாகாது. இதைத்தான் இன்று பல வயதானவர்கள் தாங்கள் இறக்கும் தருவாயில் நினைத்து புலம்புகின்றனர். "என் மகனுக்கு நான் கூறிய வார்த்தைகள் மறந்திருந்தால் எத்துணை நன்றாக இருந்திருக்கும், என்றும், அவன் மீது நான் சிறுவயதில் கொண்ட அன்பு நினைவிருந்தால் எத்துணை நன்றாயிருந்திருக்கும்..." என்று!

இந்த நிலையில் நாம் எதை மறக்க வேண்டும், எதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை சீர்தூக்கி முடிவெடுக்க அழைக்கப்பட்டுள்ளோம். இந்த நினைவும் மறத்தலும் நமக்கு பல கவலைகளை விட்டுச் சென்றிருக்கின்றன. இந்தக் கவலைகளை நாம் அழிக்க வேண்டுமென்றால், நினைக்க வேண்டியவற்றை மட்டும் நினைக்க வேண்டும், மறக்க வேண்டியவற்றை மட்டும் மறக்க வேண்டும். உறவுகள் பிரிந்ததால் பலர் பல்வேறுவிதமான மனக்காயங்களுக்கு ஆளாகியுள்ளனர். இவ்வாறு காயம் பட்ட பலர் சொல்லும் வார்த்தை, 'நான் நண்பன் என்று எண்ணிய அவன், எனக்குத் துரோகியாக மாறிவிட்டான்' என்பது தான். உண்மையில் துரோகம் என்பது என்ன? ஒரு மனிதர் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை நிறைவேறாததால் ஏற்படும் ஏமாற்றத்தையே துரோகம் என்கிறோம். ஒரு மனிதரை நண்பர் என்று நினைக்கின்றோம், அவர் மீது பல நம்பிக்கைகளை நாம் ஏற்படுத்திக் கொள்கின்றோம், அந்த நம்பிக்கையை அந்த மனிதர் காப்பாற்ற வேண்டும் என நினைக்கின்றோம். ஆனால் ஏதோ ஒரு காலகட்டத்தில் அவர் அந்த நம்பிக்கையை காப்பாற்றாமல் போய்விடுகின்றார்: அதன் பின் அவர் மிகப்பெரிய எதிரியாக மாறிவிடுகின்றார். அவருக்கு நாம் இடுகின்ற பெயர்தான் துரோகி. உண்மையில் அந்த மனிதர் துரோகியானாரா, அல்லது நாம் அவரைத் துரோகியாக்கினோமா? என்பதை சற்று உற்றுநோக்க வேண்டும்.


ஒவ்வொரு மனிதரும் தங்களுக்கென்று ஒரு திட்டத்தை வைத்திருக்கின்றனர். அந்தத் திட்டத்தின் படியே அவர்கள் வாழ்க்கை அமைகின்றது. அவர்களுக்கென்று ஒரு ஆசை, ஒரு விருப்பம், ஒரு நாட்டம், அவற்றின் படி அவர்களுக்கென்று ஒரு வாழ்க்கைமுறை என்று யாரும் அறிந்து புரிந்து கொள்ள முடியாவண்ணம் ஒவ்வொருவருடைய வாழ்வும் சென்றுகொண்டிருக்கின்றது. இந்த நிலையில் அவர் இப்படித்தான் இருக்க வேண்டும், இப்படித்தான் சிந்திக்க வேண்டும் என்று யாரும் நிர்பந்திக்க முடியாது. அவரவர் வாழ்க்கை முறைகளுக்கேற்ப அவர்களது செயல்பாடுகளும் அமைகின்றன. சில சந்தர்ப்பங்களில் நாம் எதிர்பார்ப்பது போல நம் நண்பர்கள் இல்லையென்றதும் நாம் ஏமாற்றப்பட்டதாக உணர்கின்றோம். உண்மையில் நாம் ஏமாற்றப்பட்டது நம் நண்பர்களால் அல்ல, மாறாக நம் எண்ணங்களால். நாம் நம் எண்ணங்களுக்கேற்ப, நம் ஆசைகளுக்கேற்ப, நம் வாழ்க்கைவடிவத்திற்கேற்ப சிலவற்றை செய்ய பிறரது உதவியை எதிர்நோக்குகின்றோம். அவர்கள் என் நண்பர்கள் என்பதற்காக அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நிர்பந்திக்கின்றோம். ஆனால், அவர்களுடைய நிலைப்பாட்டை நாம் மதிக்கத் தவறிவிடுகின்றோம். இந்த நிலையில் நாம் எதிர்பார்த்தது நிறைவேறவில்லை என்றதும் நாம் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்து அந்த ஏமாற்றத்திற்குக் காரணம் என நாம் நினைக்கும் நம் நண்பர்களை துரோகிகள் என்றழைக்கின்றோம்.

இந்த இடத்தில் நாம் பேணவேண்டிய சமநிலை, 'எந்த அளவிற்கு நாம் நம் செயல்பாடுகளை செயல்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றோமோ, அந்த அளவிற்கு நம் நண்பர்களும் சில செயல்பாடுகளை செயல்படுத்த நினைக்கின்றார்கள்' என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அந்த நிலைக்காக நம்மிடமிருந்து அவர்கள் வேறுபடுகின்றார்கள். எனவே அவர்களை நாம் நினைத்தது போல் இருக்கவேண்டும் என்று நிர்பந்திப்பதை விட அவர்கள் இருப்பதைப்போல் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே 'உன்னை நீ அன்பு செய்வது போல உன் அயலானையும் அன்பு செய்!' என்ற இறைவனின் கட்டளையாகும். இது போன்று நாம் எவற்றை மறக்க வேண்டும், எவற்றை நினைக்க வேண்டும், எவற்றை எதிர்க்க வேண்டும், எவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பனவற்றில் சமநிலை காக்கும் போது உண்மையில் பல துன்பங்களினின்று நாம் விடுபடுகின்றோம். அன்பார்ந்தவர்களே! 'மறத்தல்', 'நினைத்தல்' என்பது நாம் விரும்பியவுடன் நடக்கும் நிகழ்வுகளல்ல. அவை நம் கட்டுப்பாட்டை மீறி நடக்கும் செயல்கள். அப்படிப்பட்ட மறத்தல், நினைத்தலை நாம் எப்படி செயல்படுத்துவது என்பதைப் பற்றி அடுத்த இதழில் காண்போம். அது வரை உங்களிடமிருந்து நன்றி கூறி விடைபெறுகிறோம். வணக்கம்!

**இறையாசீருடன் அருட்பணி அலெக்ஸ், க. ச**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல்



நிலா காயும் நேரம்.

கவிஞன் ஒருவன் குளத்திற்கு வந்தான்.
நிலா நீரில் அசைந்தாடியது.
மணிக்கணக்காய் அதன் அழகில் மயங்கிப் போனான்.
கவிதை பாட ஆரம்பித்தான்: 'ஓ... நிலாவே...'

அவ்வழியே வந்தார் பெரியவர் ஒருவர்:
'தம்பி... இருட்டிலே இங்கே என்ன
செய்துகொண்டிருக்கிறீர்கள்?'

'என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்?
இங்கே குளத்தில் தெரியும் நிலவை இரசிக்கின்றேன்...
என்னே அழகு...! என்னே வனப்பு...!'

'தம்பி... நிழல் நிலவுக்கே இப்படி அசந்து போய்விட்டீரே.
அதோ, வானில் நிஜ நிலா தெரிகிறதே...
அதை நிமிர்ந்து பார்த்து இரசித்தால் என்ன...?'

'நிஜ நிலா வானிலல்லவா வட்டமிடுகிறது...!
உயரத்திலல்லவா உலாப் போகிறது...!'

கவிஞர் தொடர்ந்தார்:

'நிமிர்ந்து பார்த்து இரசிக்க ஆசைதான்.
ஆனால்... கழுத்து வலிக்குமே...!'

நோகாமல் நொங்கு எடுக்க நினைக்காதே..,

# கார்த்திகை 2019
# மறைமாவட்ட நிகழ்வுகள்

| | |
|---|---|
| 01.11.2019 வெள்ளிக்கிழமை | : சகல புனிதர்கள் - பெருவிழா |
| 02.11.2019 சனிக்கிழமை | : இறந்த ஆன்மாக்களின் நினைவு. |
| 03.11.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 31ம் ஞாயிறு. |
| 04.11.2019 திங்கள்கிழமை | : மறைமாவட்டத்தில் பணியாற்றி, இறந்த ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவருக்கான திருப்பலி - பேராலயம். |
| 05.11.2019 செவ்வாய்க்கிழமை | : குருக்கள், துறவற சபையினருக்கான விசேட கூட்டம் - ஜீபிலி மண்டபம். |
| 08.11.2019 வெள்ளிக்கிழமை | : குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன்னாயத்தக் கருத்தரங்கு. |
| 09.11.2019 சனிக்கிழமை | : நற்கருணை ஆண்டவரோடு 12 மணி நேரம் அலஸ்தோட்டம் - புளியங்குளப் பங்கு. |
| | : குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன்னாயத்தக் கருத்தரங்கு. |
| 10.11.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 32ம் ஞாயிறு. |
| 12.11.2019 செவ்வாய்க்கிழமை | : கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் மாதாந்த செயலமர்வு. |
| | : புனித வின்சன்ட் டி பவுல் ஆலோசனை சபை: மாதாந்தக் கூட்டம். |
| 16.11.2019 சனிக்கிழமை | : கிறிஸ்தவ வாழ்வு சமூகம் - ஒருநாள் தியானம். |
| | : திருப்பாலத்துவ சபை - ஊக்குவிப்பாளர் கூட்டம். |
| 17.11.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 33ம் ஞாயிறு. |
| | : திருகோணமலை எகெட் - கரித்தாஸ் தினம். |
| 23.11.2019 சனிக்கிழமை | : கி.வா.ச. - வைத்தியசாலை தரிசிப்பு. |
| | : அன்பியம் - மறைமாவட்ட ஊக்குவிப்பாளர் கூட்டம். |
| | : பொதுநிலையினர் ஆணைக்குழு - மறைமாவட்ட மேய்ப்புப் பணி மகாநாட்டிற்கான ஆயத்தக் கருத்தரங்கு. |
| 24.11.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 34ம் ஞாயிறு. |
| | : கடற்படைத் தள கிறிஸ்து அரசர் ஆலய விழா. |
| | : பாலையூற்று - கணேசபுர கிறிஸ்து அரசர் ஆலய விழா. |
| | : கன்னியா கிறிஸ்து அரசர் ஆலய விழா. |
| | : கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் - குழுக்கூட்டம். |
| 30.11.2019 சனிக்கிழமை | : மறைமாவட்ட மேய்ப்புப் பணி மகாநாடு. |
| 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை | : திருவருகைக் காலம் 1ம் ஞாயிறு. |

# பதிப்பாசிரியர் பகிர்வு



அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட்



அன்பிற்கினிய வாசகப் பெருமக்களே!

கார்த்திகை மாதம் என்றவுடன் நீத்தார் நினைவு எம் மனங்களில் நிரம்பி வழிய ஆரம்பித்துவிடும். இழந்த உறவுகளின் நினைவு, எம்மை அறியாமலேயே கடந்த காலத்திற்குள் நம்மை அழைத்துச் சென்றுவிடும். அவர்கள் எம்மோடு வாழ்ந்த காலம், வாழ்ந்த விதம், எமக்கு அவர்கள் செய்த அன்பான காரியங்கள், அவர்களிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட அளப்பரிய நன்மைகள், முன்மாதிரிகள் என்று பல்வேறு மனவலைகள் நம்முன் ஓடி விளையாடும்.

இறந்த அனைவரையும் நன்றியோடு கூட நினைவுகூருதல் சிறப்பானது. கார்த்திகை 2ம் நாள், சனிக்கிழமை குடும்பங்களாக, பங்குத் திருஅவையாக, மறைமாவட்டத் திருஅவையாக ஒன்றுகூடி பெற்ற நன்மைகளுக்காக நன்றிப்பா இசைப்போம், நம்மவர் ஆன்ம ஈடேற்றத்திற்காக வேண்டுதல் பலி செலுத்தி இறைஇரக்கத்தை இரந்து மன்றாடுவோம்.

இறந்தோரை நினைவுகூரும் இந்நிகழ்வு, இவ்வுலகில் வாழ்வோரையும் எமக்கு நினைவூட்ட வேண்டும். இறந்தபின் சிலை வைப்பதைவிட உயிரோடு ஊசலாடும்போதே அன்பை, அரவணைப்பை, பாசத்தை, மரியாதையை, நன்றியை தாராளமாகச் சுவைத்துப் பார்க்க வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது நம் கடனே. எனவே எமது மூத்த உறுப்பினரை, நோயினால் துன்புறும் முதியோரை, பெரியோரை, பாசத்திற்காக பரிவுக்காக ஏங்கும் வலுவிழந்த காணப்படும் எம்மவர்மேல் அன்பு மழை பொழிந்து ஆனந்தத்தில் திளைத்திடச் செய்வோம்.

தனி மனிதர்களாக, குடும்பங்களாக இழந்த உறவுகளை நினைத்து துயருறும் இந்த மாதத்தில் ஒரு சமூகமாக நாம் இழந்த உறவுகள், உடைமைகள், உரிமைகள் மற்றும் சம அந்தஸ்து என்பவற்றை நமக்கு நினைவூட்டி சீர்தூக்கிப் பார்க்கும் விதத்தில் இம்மாதம் 16ம் நாள் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் அமைந்துள்ளது. நமக்கிருக்கும் வாக்குரிமையைத் தவறாது பயன்படுத்துவோம். கட்சி பேதங்களை விடுத்து, நாட்டின் நன்மைக்காக, மக்களின் நலனுக்காக, எதிர்கால சுபீட்சத்துக்காக முன்னுரிமை கொடுத்து, இக்கால தேவையான தலைசிறந்த தலைவரைத் தேர்ந்தெடுக்க செயல்படுவோம். பாசாங்கு வார்த்தைகள், எண்ணிலடங்கா வாக்குறுதிகள் என்று ஏமாந்துபோகாமல், முன்சார்பு நிலை தவிர்த்து, யாதார்த்த நிலை கண்டுணர்ந்து வாழ நேற்றும் இன்றும் என்றும் மாறா இறை இயேசுவின் துணைநாடி நிற்போம்.

# கடவுளுக்கு காவலா.......!

அகவைகள் பல கடந்திடினும் வீரத்தலைவனை இழந்திடினும்
நம்மவர்க்காய் கவிதைகள் எழுதி ஓய்ந்த கரங்களும்
வலுவிழந்த எம் குரல்களின் தொனிகளும்
திருஅவைத் தாயிற்காக மறுமுறை விசனப்பட்ட - கவலை கண்ணில்
தெரியுதடி கண்ணம்மா கடவுளுக்கே காவல் கொடுத்ததற்காய்.

கொன்றாலும் குரல் எழுப்பாக் கூட்டம் என்பதை அறிந்தான் ஒருவன்
திங்களின் ஞாயிறுகளை கடவுள் எனக் கழிப்பான் எனவும்
அறிந்திருந்தான் இன்னொருவன்
மீட்பின் நாள் கறைபடிய எத்தனித்தான் ஒருவன்
எண்ணியதை கல் மனம் இழகா வண்ணம்
முடித்து விட்டான் இன்னொருவன்
அறிந்தோ அறியாமலோ இயேசுவை உச்சரித்த நாவுகளை
பரலோகம் அடையத் துடிக்கும் ஆத்துமாக்களை
அதன் இலக்கை அடைய உதவி விட்டான் அவன் கவலை கண்ணில்
தெரியுதடி கண்ணம்மா உறவுகளை இழந்துவிட்டோமே என்பதற்காய்

எழு திங்கள்கள் கடந்த போதிலும்
கருவறைகள் காவல் நிலையங்களாகவும்
கர்ப்பப் பீடங்கள் சோதனைச் சாவடிகளாகவும்
ஆலயம் நோக்கிக் காவலர்களும்,
ஆலய முன்றலில் வான்படையும்
வானதூதர்கள் போல் இராணுவம் இருபுறமும்
பரம்பொருளுக்கே காவலாம்....!
எத்தனை சத்திராதிகள் வந்தாலும்
கலாபனைகள் போலவே தோன்றிவிட்டாலும்
கடவுளுக்கு காவல் வழங்கிக் கொண்டு
எதிரிகளையும் மனதில் எண்ணிக் கொண்டு
இறைபிள்ளைகளாய் வாழ கண்ணில் திமிர் சொரியுதடி
கண்ணம்மா கிறிஸ்து தாசன் என்பதற்காய்

அருட்சகோ. ச. டெல்சன்
மெய்யியல் பீடம்
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற மாத தொடர்ச்சி.......

# உண்மையா அது என்ன?



உலகளவிலே கூட ஊடகவியலாளர் ஜமால் கஷூதி அரேபியாவிலே காணாமல் போனார். பின்பு கொலை செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. யார் கொலை செய்தார்கள்? அவரது உடல் எங்கே? உண்மை எங்கே?

ஏன் எமது யாழ் குடாநாட்டில் காணாமல் ஆக்கப்பட்ட அருட்தந்தை ஜிம் பிரவுணும் அவருடன் சென்ற மறையாசிரியரும் எங்கே? இறுதி யுத்தத்தின் பின்பு எமது கண்களுக்கு முன்னால் பஸ்சில் ஏற்றிச் செல்லப்பட்ட அருட்தந்தை பிரான்சிஸ் யோசேப்பும் அவருடன் சென்ற 400 இளைஞர்களும் எங்கே? உண்மை எங்கே? நான் உண்மையிலேயே குற்றமற்றவன் என்றால் ஏன் வெளிநாட்டு நீதிபதிக்கு அஞ்ச வேண்டும். வெளிநாட்டு நீதிபதியின் விசாரணையால் நாட்டின் இறைமை பாதிக்கப்படுமா? நாட்டிற்கு இறைமையை வழங்கும் மக்களுக்கே நீதி கிடைக்காத வேளையில் அவர்களுக்கான நீதி வெளிநாட்டு நீதிபதிகளால் வழங்கப்படுமாயின் அது நாட்டின் இறைமையைப் பாதுகாக்கின்றதே தவிர அது அதனை மீறவில்லை.

ஏன் எமது ஊடகங்கள், பத்திரிகைகள் கூட நடந்த சம்பவங்களை "உண்மையோடு" நடந்தவாறு சொல்வதில்லை. மாறாக பக்கசார்போடே செய்திகளை வழங்குகின்றன. ஏன் பத்திரிகைகளின் ஆசிரியர் பக்கங்கள் கூட மத சார்பாகவோ அல்லது அரசியல் கட்சிகளின் சார்பாகவோ வெளிவருகின்றன. இன்றைய உலகிலே மக்களுக்கு செய்தி வழங்கும் ஊடகங்களே உண்மையை மூடி மறைக்கின்றனவாக காணப்படுகின்றன. ஊடகங்களில் உண்மை எங்கே?

எது எவ்வாறாயினும் இன்றும் கூட உண்மையோடு வாழும் உள்ளங்களும் உண்மைக்காக உயிரைக் கொடுக்கும் மனிதர்களும் உலகத்திலே இருக்கத்தான் செய்கிறார்கள். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இதற்கு சிறந்த உதாரணம். அவர் எதையும் மறைப்பதில்லை. "ஆம்" என்றால் "ஆம்" எனவும் "இல்லை" என்றால் "இல்லை" எனவும் சொல்லுங்கள் என்ற இயேசுவின் (உண்மையின்) (மத் 5:37) வார்த்தைக்கு முரணாகாது தனது வாழ்வை கொண்டுள்ளார்.

எனவே இன்று உண்மையோடு வாழ, உண்மையாக வாழ அழைக்கப்படுகின்றோம். அதற்கு முதல் உண்மையென்றால் என்னவென்று தெளிவாக வேண்டும். அறியவேண்டும். அன்று பிலாத்துவிற்கு "உண்மையை" அறிய வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இன்று எமக்கும் இறைவனால் வழங்கப்படுகின்றன. அதாவது இயேசுவே இறைமகன் என்பதை நாள்தோறும் அறிய கத்தோலிக்கர்களாகிய எமக்கு நிறைய சந்தர்ப்பங்கள் தரப்படுகின்றன.

எனவே இயேசுவை இறைமகனாகிய மெசியா என்று நம்புவோம். அவரது வார்த்தைகளுக்கு செவிமடுத்து உண்மைக்கேற்ப எமது வாழ்வை அமைப்போம். குறிப்பாக "நீங்கள் ஒருவர் மற்றவருடன் அன்பு கொள்ள வேண்டும்" என்பதே என் கட்டளை (யோவா 15:17) என்ற அவரது ஒரே கட்டளையை எம் வாழ்வின் மகுடமாகக் கொண்டு வாழுவோம். உலகில் காணப்படும் பொய்மைகளுக்கெதிராகக் குரல் கொடுப்போம். எமது வாழ்விலும் உண்மைக்கு சான்று பகருவோம். உண்மைக்கேற்ப வாழுவோம்.

ச. யூட் கெமில்டன்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

# கவிதைப் போட்டி முடிவுகள்

## அமைதியைக் காண்போம்

அருட்பணி. என்.சி. அருள்வரதன்

### சரியான கவிதை வரிகள்

❖நாட்டினை விட்டு மறைந்து விட்ட
❖நல்லமைதி எங்கேயும் இல்லையே
❖எங்கும் கலவரம் பகையுணர்வுகள்
❖வெடித்து எங்கும் பரவும்போது
❖அமைதியைக் காண்பது எப்படியோ?
❖தவறுகள் எங்கும் தொடராமல்
❖அமைதி நிலையே நிலைகொள்ள எல்லோருமாய்
❖அனைவரும் அன்போடு ஒன்றிணைந்தே
❖ஆறுதலாகச் செயற்படவே
❖மறைந்த அமைதி மீண்டும் வருவது உண்மையே!

போட்டியில் கலந்து கொண்டவர்கள் : 12 பேர்
சரியாக எழுதியோர் : 04 பேர்
பரிசுத்தொகை சமமாக பிரித்து வழங்கப்படுகிறது.

ரூபா 250/-
தே. சமில்டன்
3ம் வட்டாரம்,
நிலாவெளி

ரூபா 250/-
ஸ்ரெலா ஜெரோம்
6ம் வட்டாரம்
சாம்பல்தீவு

ரூபா 250/-
யே. தம்மிக்கா
676, அன்புவழிபுரம்

ரூபா 250/-
தி. இ. யேசுதாசன்
676, அன்புவழிபுரம்

பங்கு கொண்டோருக்குப் பாராட்டுக்கள்.

சென்ற மாதத் தொடர்ச்சி........

# நீதிமன்றங்களும் மத்திய சபைகளும்



நீதி மன்றக் கட்டடத் தொகுதி அதைப்பராமரித்தல், சகல உத்தியோகத்திற்கான செலவீனங்கள் அதிகமாக இருக்கும் ஆனால் மத்தியஸ்த சபையினருக்கோ பொதுக்கட்டடமோ, பாடசாலை மண்டபமோ, மரநிழலிலோ நடைபெறும் இச்சபை தற்போது மத்தியஸ்தரது போக்குவரத்து அலவன்சாக ஒரு கிழமைக்கொருதரம் 500 ரூபாவும் மாதம் 4 அல்லது 5 தடவை சமுகமளித்தால் மொத்தமாக ரூபா 2000 அலவன்ஸ் பெறலாம். ஏனெனில் இது ஓர் அர்ப்பணிப்பு சேவை கொடுப்பனவுக்காக அல்லது சேவைக்காக இயங்குகிறது.

இச்சபைகள் கி.மு 425ம் காலப்பகுதியில் கூட செயற்பட்டன 1856ம் ஆண்டு கிராம நீதி மன்றங்கள் வழியாக பாரம்பரிய முறைகளில் கிராமப் பிரச்சனைகளை சமூகமாகத் தீர்க்க எடுத்த முயற்சிகள் பலனளிக்காது போய்விட்டன. இதனால் நீதி மன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் தாக்கம் சமூகத்தலைவர்களைக் கொண்ட மத்தியஸ்தர்களாக இணக்க சபைகள் சட்டப்படி உருவாக்கப்பட்டது. அந்நேரம் சிறிய சொத்து சம்பந்தமான விடயங்களைக் கொண்ட வழக்கையும் சட்டவிரோத செயலையடக்கிய வழக்குகளையும் விசாரித்துத் தீர்வு காணுவது இச்சபைக்குப் பொறுப்பாக்கப்பட்டது.

இதில் நியமிக்கப்பட்ட நியமனங்களில் அரசியல் செல்வாக்குகள் அதிகரித்து சபை அங்கத்தவர்க்கு தகுந்த பயிற்சியின்மையும், நடுவர்களின் தலையீட்டால் கடமைகளில் தரக்குறைவு ஏற்பட்டமையும், ஊழல், பக்கச்சார்பான குற்றச்சாட்டுகளாலும் இன்னும் பல காரணங்களால் 1978ம் ஆண்டு இணக்க சபை முறை நீக்கப்பட்டது. இதனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் மக்களது செலவீனங்களைக் குறைக்கும் சிறிய பிணக்குகளை தீர்த்து நீதி மன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை அகற்றும் தேவைகள் தொடர்ந்து காணப்பட்டமையால் 1988ம் ஆண்டு பாராளுமன்றத்தில் 72ம் இலக்க சட்டத்தின் படி மத்தியஸ்த சபைகள் நிறுவப்பட்டன. பின்னர் சிறந்த முறையில் செயற்படத் தொடங்கி நீதி மன்றத்தின் தேக்கநிலைக்கு விடிவு கிட்டியும் சமூகங்களால் சிறிய பிரச்சனைகள் பயனுறுதியான முறையில் தீர்க்கும் ஒரு மாற்றுக் காரணியாக அமைந்தது. ஏனெனில் மத்தியஸ்த சபை ஆணைக்குழு மத்தியஸ்த சபைகளை சுதந்திரமாக இயங்கவைத்தமையாகும். இம் மத்தியஸ்த ஆணைக்குழுவை நியமித்தவர் அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் மூவரை நியமித்தார்.

அவர்களுள் ஓய்வு பெற்ற நீதியரசரும் ஏனைய இருவர் மதிப்பு மிக்க தேசியதலைவர்களாவர். இச்சபையை நீதி அமைச்சு மேற்பார்வை செய்துவருகிறது. மத்தியஸ்தர்கள் சமூகத்தில் மதிப்பு வாய்தவர்களிடையேயிருந்து பிரேரிக்கப்பட்டு இது விடயமான பூரண பயிற்சி அளிக்கப்பட்டு பயிலுனர்களின் செயற்திறனை பகுப்பாய்வு செய்த பின்னர் பயிற்றுவிப்பாளரது பயிற்றுரைகள் பெற்ற பின்னரும் ஏனைய தகைமைகளையும் வைத்து ஆணைக்குழு அவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டன. இது உலக பாரிய மத்தியஸ்த துறையில் 3வது இடத்தைப் பெறுகிறது. இலங்கையில் தற்போது 310ற்கு மேலான மத்தியஸ்த சபைகள் நிறுவப்பட்டு 7150க்கு மேலான மத்தியஸ்தர் நியமனம் பெற்று செயலாற்றுகின்றனர்.

மேலும் இது ஒரு நீதி மன்றத்திற்குச் சமமான ஒன்றாகும். ஆரம்ப நீதி மன்றம் எல்லாம் இம் மத்தியஸ்த சபைகளுக்கு நீதி மன்றிலிருந்து பிணக்குகள், பொலிஸ் நிலையங்களில் இருந்து பிணக்குகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பிரத்தியேகமான பிணக்குகள் மேலும் சகல வங்கிகள் , தே.லி.அ.சபை, சமுர்த்தி போன்ற சகல திணைக்களங்களிலுருந்து பிணக்குகள் ஆற்றுப்படுத்துகின்றனர். இதன் பயனாக சுமார் 80மூ பண நிலுவைகளைப் பெறக்கூடியதாக உள்ளது. இப்பிணக்குகளை இம் மத்தியஸ்த சபை காரணிகளாக அமைகின்றது. ஏற்கனவே நீதி மன்றங்களின் செயற்பாடுகளைப் பார்த்தோம் இனி மேலாக மத்தியஸ்த சபைச்செயற்பாடுகளைப் பார்ப்போம். மத்தியஸ்தம் என்றால் நடுநிலை வகிக்கும் தராசு போன்றது. பக்கச்சார்பற்று, நீதியைக்கடைப்பிடித்து, பாரபட்சம் காட்டாது இதை மனதிற்கொண்டு மத்தியஸ்தம் செய்யவேண்டும்.

மத்தியஸ்தர் யார்? அந்தந்த பிரதேச செயலகப்பிரிவில் வாழும் சிறந்த குணநலம் உள்ளவர்கள், சமூக சேவையாளர் அர்ப்பணிப்புச் சேவையில் ஈடுபடுபவர். இது போன்றவர்களை கிராம உத்தியோகத்தர் தெரிவு செய்து நீதி அமைச்சிற்கு அனுப்பி அவர்களால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவானவர்களில் பயிற்சி வழங்கிய பின்னரே தெரிவு செய்து நியமனக் கடிதம் அனுப்புவர். இதில் எந்த அரசியல் தலையீடுகளும் இருக்காது.

மத்தியஸ்தம் மக்களுக்கு புரியும் சிறந்த சமூக சேவை எனக் கூறலாம். மத்தியஸ்தர் தங்களது செயற்பாட்டின் போது,

❖ தனிநபர் பெறுமதி :- பிணக்கிற்கு வரும் ஒவ்வொரு மனிதரையும் பெறுமதி மிக்க மனிதராக மதித்தல்

❖ நேர்முகத்தன்மையை வெளிப்படுத்தும் உணர்வுகள் :- பிணக்குகளால் ஒவ்வொரு மனோ பாவனையில் சமூகமளித்து தமது தீவிர உணர்வுகளை வெளிப்படையாகக் காட்டுதல் ஒரே நோக்கத்திற்கமைய வெளிப்படுத்தும் உணர்வுகளாகும். மேலும் அவர் கூறும் வெளிப்பாடுகளை மத்தியஸ்தர் நன்கு அக்கறையோடு செவிமெடுக்க வேண்டும் மற்றவரை குறை கூறாமல் பாதுகாக்கவும் அவர்களது உறவுகளைப் பாதிப்படையா வண்ணம் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளும் தீர்வுகளை தடுக்காமல் இருக்கத்தக்க விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.

தொடரும்............

சாமஸ்ரீ தேசமானிய சந்தியா ஜோன்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
அகில இலங்கை சமாதான நீதவானும் மத்தியஸ்தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து வாழ்கின்றார் - திருத்தூது ஊக்கவுரை திருத்தந்தை பிரான்சிஸ்

அருட்பணி அ.அ. நவரெத்தினம்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் இளையோருக்கும், திருஅவையின் அனைத்து இறை மாந்தருக்குமாக சித்திரை 2, 2019இல் வெளியிடப்பட்ட "கிறிஸ்து வாழ்கின்றார்" (Christus Vivit) எனும் திருத்தூது ஊக்கவுரையின் சுருக்கம்
இளையோருக்கான திருத்தூது ஊக்கவுரையின் தலைப்பானது "கிறிஸ்து வாழ்கின்றார்" என்பதாகும். இதனூடாக இளையோருக்கு திருத்தந்தை நம்பிக்கையினை கொண்டு வருகின்றார். இவ் ஊக்கவுரையானது ஒன்பது அலகுகளாக பிரிக்கப்பட்டு இளையோரை மையப்படுத்தி பேசுகின்றது.

## அலகு 1 – இறைவார்த்தையின் ஒளியில் இளையோர்

திருத்தந்தையவர்கள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பான இளையோரைக் குறித்து அனைவரின் நினைவிற்கு கொண்டு வருகின்றார். அவர்களுள் யாக்கோபின் இளைய புதல்வனும், கடவுளால் விரும்பப்பட்டவனுமாகிய யோசேப்பு, கடவுளுடன் வெளிப்படையாக பேசிய நீதித்தலைவர் கெதயோன், இஸ்ரயேலின் அரசர்களாகிய சவுல், தாவீது, சாலமோன் போன்றவர்களையும், ரூத் எனும் பெண்மணி, சிரியா நாமான் வீட்டில் பணிபுரிந்த சிறுமி போன்றவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவருமே தங்களது இளம் பராயம் முதலே கடவுளிடமிருந்து சிறப்புப் பணியினைப் பெற்றுக் கொண்டார்கள். இவர்களில் இளையோர் மட்டில் அக்கறையுடன் செயற்படும் கடவுளைக் காணலாம்.

புதிய ஏற்பாடும் இளமையைக்குறித்த கருப்பொருளினை பல்வேறுபட்ட சம்பங்களில் வெளிக்கொணர்கின்றது. அவற்றுள் லூக்கா 15ம் அதிகாரத்திலுள்ள பிரபல்யம் வாய்ந்த ஊதாரி மைந்தன் (இளையமகன்) உவமை குறிப்பிடத்தக்கது. இங்கு இளைய புதல்வன் தனது வாழ்வினைப் பணயம் வைத்து பிழையான வழியினில் சென்றபோதும், தான் செய்தது தவறென்று உணர்ந்தபோது திரும்பி வீட்டிற்கு வருகின்றான். மறுபக்கத்தில் வீட்டிலிருந்து கொண்டு மன்னிக்க மறுத்த மூத்த சகோதரன் தன் தந்தையோடும், வீட்டாரோடும் கொண்டாட மறுக்கின்றான். இயேசுவும் தனது நற்செய்திப் போதனைகளில் இளையோரை உயர்த்திப் பேசுவதைக் காண்கிறோம். "சீடர்களுக்குள் உயர்ந்தவர் யாரெனில் அனைவரிலும் கடையரானவரே" என்று உயர்வாக எடுத்துரைக்கின்றார். புனித பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதிய முதல் மடலில் "நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னை தாழ்வாகக் கருதாதிருக்கட்டும்" என்கிறார் (1 தீமொ. 4:12).

இங்கு இளையோர் உயர்வாகக் கூறப்பட்டதனால் முதியோர் மதிக்கப்படக்கூடாது என்று கருதிவிடக்கூடாது. மாறாக அவர்கள் மிகவும் உயர்வாக மதிக்கப்பட வேண்டுமென்பதனை விவிலியம் பின்வருமாறு கூறுகிறது. "இளைஞர்களே, நீங்கள் முதியோருக்குப் பணிந்திருங்கள்" (1 பேதுரு 5:5). இளையோராக இருப்பதென்பது மாற்றத்திற்கு விருப்பமாய் இருப்பதும் அதேவேளையில் மணமகனின் வருகைக்காக காத்திருந்த மகளிரைப்போல விவேகமாயிருப்பதுமாகும். "இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு" (லூக். 7:14) என்று இயேசு நயீம் விதவையின் மகனுக்கு கூறியதுபோல, ஒவ்வொரு இளையோரும் கிறிஸ்துவின் வார்த்தையினைக் கேட்க தயாராக இருக்கவேண்டும்.

## அலகு 2 – இயேசு, என்றும் இளமையானவர்

இயேசு என்றும் இளமையானவர் என்று திருத்தந்தை கூறுவதன் வாயிலாக இளமையாக இருப்பதனை புனிதப்படுத்துகின்றார். சிறுவனாக இயேசு எகிப்தில் அகதியாக காட்சியளிக்கின்றார் மீண்டும் நாசரேத்து எனும் சொந்த ஊருக்கு வருகின்றார். யோர்தான் ஆற்றங்கரையில் பல்லின மக்களுடன் திருமுழுக்கிற்காக காத்து நிற்கின்றார். அவ்வேளையில் "என் அன்பார்ந்த மைந்தர் இவரே" என்ற வாக்கொலி கேட்கின்றது. அத்தகைய வார்த்தைகள் அனைத்து இளையோரின் காதுகளிலும் இன்றும் ஒலிக்க வேண்டும்.

இயேசு எருசலேம் ஆலயத்தில் காணமற்போன பிற்பாடு, தனது பெற்றோருக்கு பணிந்து நாசரேத்தில் வாழ்ந்த வாழ்க்கையும் நமக்குத் தெரியும். லூக்கா நற்செய்தியாளர் இதனைக் குறிப்பிடும்போது "இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தார்"என்கிறார். கீழ்படிதலின் அடையாளமாக தனது தந்தையின் தொழிலாகிய தச்சுத் தொழிலில் ஈடுபட்டார் (மாற். 6:3). இயேசு தன்பால் ஈர்க்கப்பட்ட இளைஞர் கிடையாது, மாறாக ஆலயத்தில் அவர் காணமற்போன சம்பவம் அவர் இலகுவாக தனது உறவுகளுடனும், மக்களுடனும் இணைந்து செயற்படுபவர் என்கின்ற செய்தியினைத் தருகின்றது. இதனாற்தான் அவரது பெற்றோரும் அவர் உறவுகளுடன் இணைந்து பயணிக்கின்றார் என எண்ணிக்கொண்டு அவரைப்பற்றி சிந்தியாது பயணித்தனர். இளைஞன் இயேசுவின் வாழ்வில் இணைந்து பயணிப்பது என்பது மிக முக்கியமானதாகும்.

இயேசுவின் இளமைக்கால நாட்கள் குறிப்பாக இன்றைய இளையோருக்கு கற்பிப்பது யாதெனில் தந்தை இறைவனுடனும், குடும்பத்தாருடனும் நாம் எத்தகைய உறவினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். இளையோர்கள் தங்களது பணியினையும், தனிப்பட்ட அழைப்பினையும் அறிந்து சரிவர உணர்ந்துகொள்ள தங்களையே ஆவியானவரின் வழிகாட்டுதலுக்கு திறந்து விடவேண்டும். இயேசுவைப் போன்று இளையோர்கள் ஏழைகளுக்கும், நோயாளர்களுக்கும் இரக்கம் காட்ட வேண்டும்.

இளையோருக்கான திருஅவையின் செய்தியானது இளையோருக்கு மாத்திரமல்ல மாறாக முழுத் திருஅவைக்குமானது. திருஅவையானது எப்பொழுதும் புதுப்பித்தலுக்காக திறந்திருக்க வேண்டும். திருஅவையானது கடவுளின் வார்த்தைக்கும், நற்கருணை விருந்திற்கும், கிறிஸ்துவிற்கும், காலத்தின் அறிகுறிகளுக்கும் தன்னையே திறந்திருக்கின்றபோது அது இளமையாகின்றது.
இம்முயற்சியில் திருஅவைக்கு இளமையின் முதல் அடையாளமாகத் திகழ்பவள் அன்னை மரியாவாகும். இளையோரைப்போன்று தனக்கு வானதூதரின் செய்தி கிடைத்தபோது கேள்வி கேட்கத் தயங்கவில்லை (லூக். 1:34) ஆயினும் இறுதியில் தெளிவு பெற்று தனது பணியினை ஏற்றுக்கொள்கின்றாள் (லூக். 1:38). ஊக்குவிப்பவளாகவும் மாறினாள்.


பயமற்ற மரியாவிடமிருந்து இளையோர் கற்றுக்கொள்ள முடியும். தன்னுடைய மகனின் திருப்பாடுகளைக் குறித்து எந்தவிதமான சலனமும் அற்றவளாக மரியா தனது பணியினை முழுமையாக அரவணைத்துக் கொண்டாள். அவளே வாழ்வின் இறுக்கமான, நலிவுற்ற தருணங்களில் ஊக்குவிப்பவளாகவும் மாறினாள்.

திருஅவையில் புனிதத்துவத்தின் அடையாளமாக பலதரப்பட்ட இளையோர் பரவிக் கிடக்கின்றனர். இவர்களுள் கொங்கோ நாட்டின் முத்திப்பேறுபெற்ற இசிதோர் பக்கன்ஜா (Bl. Isidore Bakanja) என்னும் இளைஞன் ஏனைய இளையோருக்கு கிறிஸ்தவத்தை அறிமுகப் படுத்தியமைக்காக சித்ரவதை செய்யப்பட்டான். அவன் இறப்பதற்கு முன்னதாக தன்னை சித்ரவதைக்கு உள்ளாக்கியோரை மன்னித்தான்.

## அலகு 3 – நீரே கடவுளின் "தற்போதையவர்"

இளையோர் திருஅவையின் எதிர்காலம் மட்டுமல்ல மாறாக அவர்கள் நிகழ்காலத்தவர், எனவே அவர்கள் திருஅவையிலும், சமூகத்திலும் தங்களுக்குரிய பொறுப்பினை ஏற்க வேண்டுமென திருத்தந்தை வலியுறுத்துகின்றார். கடவுளின் "தற்போதையவர்" என்கின்ற நிலையில் வளர்ந்தவர்கள் இளையோருக்கு செவிசாய்க்க வேண்டும், அத்துடன் அவர்களுக்கு ஏற்கனவே தயாராகவுள்ள விடைகளை வழங்குவதைத் தவிர்க்க வேண்டும். இளையோர் அவர்களில் தெய்வீக வாழ்வின் விதைகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை வளர்ந்தவர்கள் உணர வேண்டும்.

தற்போதைய இளையவர்கள் பல்வேறுபட்ட கருத்தியல்களால் ஏமாற்றப்பட்டு துன்பத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இத்தகைய கருத்தியல்கள் இளையோர்கள் அடுத்தவரை பாலியல், சாதி, இனம் இன்னும் பல விதமான செயற்பாடுகளால் ஏளனப்படுத்த உதவுகின்றன. இன்றும்கூட பல இளையோர்கள் தாங்கள் பின்பற்றும் சமயம், அவர்களது பொருளாதார நிலை, அவர்களது இன அடையாளம் போன்ற காரணிகளால் புறக்கணிக்கப் படுகின்றார்கள். திருஅவையானது இளையோரின் பிரச்சனைகள் குறித்து பாராமுகமாய் இருக்க முடியாது. ஒரு தாயாக அவர்கள் எதிர்கொள்ளும் இத்தகைய பிரச்சனைகளில் திருஅவை அவர்களுடன் இணைந்து அழவேண்டும். அவர்கள் மட்டிலான திருஅவையின் அழுகையானது, அது அவர்கள் மட்டில் காண்பிக்கும் அதனுடைய இரக்கமும், கனிவுமாகும்.



திருத்தந்தை இளையோரைப் பாதிக்கும் மூன்று வீடயங்களைக் குறித்து முக்கிய கவனம் செலுத்துகின்றார்.

1.இன்றைய டிஜிட்டல் சூழலானது ஒளிமயமான அதேவேளையில் இருள்சூழ்ந்த பகுதிகளையும் கொண்டது. நேர்மறையான பக்கமாக டிஜிட்டல் சூழ்நிலையானது இளையோர் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் வாயிலாக பொதுப்பணித் துறையில் சுறுசுறுப்பாக செயற்பட உதவுகின்றது. மறுபக்கத்தில் எதிர்மறையாக டிஜிட்டல் சூழ்நிலையானது தனிமைக்கும், சூழ்ச்சிக்கும், போலியான செய்திகளுக்கும், வன்முறைக்கும், போதைக்கும், வாழ்வின் உண்மையான சூழ்நிலைகளிலிருந்து விடுபட்ட தன்மைக்கும் இட்டுச் செல்கின்றது.

2.யுத்தம், வன்முறை, துன்புறுத்தல், வறுமை, இயற்கை பேரழிவுகள், பட்டினி போன்ற காரணிகளால் இடம்பெயர்வோர் திருஅவையின் பிரதான கரிசனையாக உள்ளார்கள். இத்தகைய சூழ்நிலைகள் குடும்பங்களை பிரிக்கும் தன்மைக்கு இட்டுச்செல்லும். பெரும்பாலான இடம்பெயர்ந்தவர்களுக்கு திருஅவையே அடையாளப்படுத்தும் குறியீடாகவுள்ளது. நேர்மறையாக நோக்குகின்றபோது இடம்பெயர்வானது, பண்பாடுகள் சந்திக்கும் இடமாக மாறியுள்ளது. அதனை நாம் வரவேற்க வேண்டும். இதனூடாக இடம்பெயர்வானது இடம்பெயர்ந்தவருக்கும், அவர்களை வரவேற்பவர்களுக்கும் செறிவூட்டல் மூலமாக அமைந்துள்ளது.
3.துஷ்பிரயோகம், அதிலும் சிறப்பாக பாலியல் துஷ்பிரயோகமானது ஒரு சில திருஅவைத் தலைவர்களாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத்தீய செயலினை திருத்தந்தை கண்டிப்பதுடன், இத்தகைய செயல்களுக்கு எதிராக துணிவுடன் எழுந்து நின்று குரல் எழுப்புகின்ற அனைவரையும் பாராட்டுகின்றார். இவ்வுலகினை நிறைவு செய்கின்றபோது திருத்தந்தையவர்கள் இயேசுகிறிஸ்து அளிக்கின்ற நம்பிக்கையில் இளையோர் தங்களையே புதுப்பித்துக்கொள்ள அழைக்கின்றார். அதேவேளையில் இளையோர் அனைவரும் ஒன்றிணைந்த சக்தியாகச் சேர்ந்து தாங்கள் எதிர்கொள்ளும் சவால்களை சந்திக்க அழைப்பு விடுக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பதில் மகிழ்ந்திருப்போம்

'மன்னிக்கத் தெரிந்த மனம் மாணிக்கக் கோயிலப்பா' என்பது ஒரு முதுமொழி. இவ்வுலகிலேயே மிகச்சிறந்த பண்பு என்றால் அது 'மன்னிப்பு' என்று கூறுவதில் எந்தவொரு ஐயப்பாடும் இல்லை. ஆம் மன்னிப்பதால் சமாதானம் கிடைக்கிறது. சந்தோஷம் பிறக்கிறது. பகை வன்மம் நீங்குகிறது.

எமக்கெதிராகச் செய்யும் குற்றங்கள், பிழைகள், தவறுகள் போன்றவற்றை மன்னிக்கின்றோமா? அல்லது அதை எம் மனதில் வைத்து வைராக்கியப்படுத்துகின்றோமா? கொலோசையர் 3:13இல் "ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள், ஒருவரைப் பற்றி ஒருவருக்கு முறையீடு இருந்தால் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னிக்க வேண்டும்" என்று இவ்வாறு கூறப்படுகின்றது. ஆம், எம்முடைய பாவங்களுக்காக இயேசு ஆண்டவர் சிலுவையிலே இரத்தம் சிந்தி மரித்தார். அது மட்டுமா? இயேசு ஆண்டவர் சிலுவையிலேயே தொங்கிய போது கூட 'தந்தையே இவர்களை மன்னியும்' என்று மன்றாடியதுமல்லாமல் எமது பாவங்களையும் மன்னிக்க வேண்டினார். ஆனால் நாம் பிறரின் குற்றங்களை மன்னிக்கத் தாமதிக்கின்றோம். பொறுத்துக் கொள்ள மறுக்கின்றோம். இதனால் மனமகிழ்ச்சியை இழந்து விடுகின்றோம்.

குற்றங்கள், தவறுகளை மன்னிக்காது வைராக்கியமாக இருப்பதும், பழி வாங்குவதும் பிரச்சனையாக உருவெடுக்கின்றது. இதன் உச்ச கட்டமாக அடிபிடி சண்டை சச்சரவு ஏன் மரணமும் கூட நடந்திருக்கின்றது. இறைசாயலாக படைக்கப்பட்ட எம் ஒவ்வொருவருக்குள்ளும் இரக்கமான இருதயத்தை ஆண்டவர் தந்திருக்கின்றார் என்பதை பல தடவைகளில் மறந்து விடுகின்றோம். அதனை மூடி வைத்துவிட்டு இறுக்கமான, கடினமான இருதயத்துடன் மன்னிக்காது செயற்படுவதைக் காணமுடிகின்றது. திருப்பாடல் 32:01இல் 'எவரது குற்றம் மன்னிக்கப்பட்டதோ எவரது பாவம் மறைக்கப்பட்டதோ அவர் பேறுபெற்றவர்' என்று கூறப்படுகின்றது. ஆம் பேறுபெற்றவர்களாக ஆண்டவர் முன்னிலையில் தெரிவதற்கு பிறர் எமக்குச் செய்யும், குற்றங்கள், தவறுகள் யாவையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். மன்னிக்க வேண்டும். மத்தேயு 6: 15இல் 'மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்' என்று நம் இயேசு ஆண்டவர் தம் உதடுகளால் மொழிந்துள்ளதைக் காண முடிகிறது. அதுமட்டுமல்ல விவிலியத்தில் 'காணாமற்போன மகன்' உவமையில் இறைதந்தையின் மன்னிப்பின் மகிமையை வாசித்து உணரமுடிகின்றது.

ஆம் சிறுவயது தொடக்கம் வயது முதிர்ந்த காலம் வரைக்கும் பிறர் எமக்குச் செய்யும் சகல பிழைகள், குற்றங்களை பொறுத்துக் கொள்வோம். மன்னித்து மகிழ்ச்சியைப் பெற்றிடுவோம். இதனால் ஆண்டவரின் ஆசீர்வாதங்களைப் பெற்று புதிய இறை சமூகத்தையும் படைப்போம்.

திருமதி. சரோஜினி சிறில்பத்ததிநாதன்
ஓய்வு பெற்ற ஆசிரியை
உவர்மலை

# சமூக ஊடகங்களின் அபாயம் ஓர் சமூக விழிப்புணர்வு

நவீன தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி எந்தளவிற்கு வேகமாக இருக்கிறதோ அதனைவிட வேகமாக அதன் பாதிப்புக்களும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. சமூக வலைத்தளங்களின் பயன்பாட்டுப் பெருக்கமும் அவ்வாறான ஒன்றாகவே மாறியிருக்கிறது. இன்று தனி மனித சுதந்திரம், சமூக பொறுப்பு, அமைதி, நாடுகளின் பாதுகாப்பு என்று எல்லா வகைகளிலும் சமூக ஊடகங்கள் அச்சுறுத்தல் மிக்கவையாக பார்க்கப்படுகின்றன.

சமூக ஊடகங்கள் கடந்த தசாப்தத்தில் தவழும் குழந்தையாக இருந்த போது, அதன் பயன்பாடுகள் பற்றி மாத்திரமே பேசப்பட்டது. சித்தரிக்கப்பட்டது. வல்லுனர்கள், அறிஞர்கள், புதிய ஊடகம் (New Medis) என்ற கண்ணோட்டத்தில் மாத்திரமே நோக்கினர். அப்போது அது முற்றிலும் மனித குலத்திற்கு சாதகமான ஒன்றாக மாத்திரமே விளங்கியது. அனைவராலும் நன்மையானதாக மாத்திரமே பார்க்கப்பட்டது. அதற்கு தீமையான ஒரு பக்கம் இருக்கும் என்று யாரும் அப்போது கவனிக்கவில்லை. அதனால் சமூக ஊடகங்களின் மறுபக்கத்தை யாரும் ஆய்வு செய்ய முடியவில்லை.

இப்போது இதன் நிலை என்ன? அனைத்தும் தலைகீழாக மாறிவிட்டன. சமூக வலைத்தளங்களின் பயன்பாட்டின் வேகத்துக்கு எதனாலும் ஈடு கொடுக்க முடியாமல் இருக்கிறது. அதனால் 'கேட்டினை விரும்புவோர் அதனால் அழிவர்' (சீராக் 3,26) என்பதற்கு ஏற்ப தீயவற்றை எண்ணி பயன்படுத்திய சிலரின் வ[illegible]த்தினால் மனித குலத்துக்கு பாதிப்புக்கள் கொணரும் ஊடகமாக இப்போது மாறி வருகிறது.

பேஸ்புக், டுவிட்டர், வைபர், வாட்ஸ்அப், இன்ஸ்ராகிராம், யூரியூப் என்று சமூக ஊடகங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இவற்றின் வருகையும் பயன்பாடும் அதிகரிக்க அதிகரிக்க இவை தனி மனித வாழ்வில், சமூகத்தில், நாட்டில் உலகின் அதன் செல்வாக்கும் பாதிப்புக்களும் அதிகரித்து வருகின்றன. முற்றுமுழுதாக சமூக வலைத்தளங்களின் உதவியால் நடைபெற்ற புரட்சிகளையும். மாற்றங்களையும் நாம் அறிந்திருக்கின்றோம். பத்திரிகைகளில் வாசித்திருக்கிறோம். உதாரணமாக தமிழ்நாட்டு ஜல்லிக்கட்டு போராட்டம், டுனீசியா, சிரியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் அரபுலக வசந்தம் என்ற புரட்சி, இயற்கை அனர்த்த உதவிகள் போன்றவற்றை நாம் காணலாம். ஆனால், தற்போது அண்மையில் இலங்கையில் நடைபெற்ற அசம்பாவிதங்களை நோக்கும் போது இதன் அச்சுறுத்தலை எம்மால் ஏற்காமல் இருக்க முடியுமா?

அருட்சகோ. எமர்சன் றாகல்
இறையியல் பீடம்,
அம்பிடிய, கண்டி

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

அன்னை மரியாள்

பங்கு பற்றியவர்கள் : 54 சிறார்கள்

பரிசுக்குரியவர்கள்

| | | |
|---|---|---|
| 1ம் பரிசு 500/- | 2ம் பரிசு 300/- | 3ம் பரிசு 200/- ரூபா |
| ஜே. ஜான்சி | ஜே. லூவிஸ் றெஜினோல்ட் | ரி. ஜதுசன் |
| 64ம் கட்டை | 4ம் ஒழுங்கை | பீலியடி |
| சகாயபுரம் | பெரியகுளம், | கன்னியா |
| மூதூர் | சாம்பல்தீவு | |

## இவ்வாண்டுக்கான சிறப்புப் போட்டி புனித லூக்கா நற்செய்தி போட்டி முடிவுகள் அதிகாரம் 13 - 15

பங்கு பற்றியவர்கள் : 53 பேர்
மிகச் சரியாக விடையளித்தோர் : 03 பேர்

1ம் பரிசு 500/-
பி. நிலுக்ஷனா
இல. 08, சென்ற் யூட் லேன்
பூம்புகார் வீதி
பாலையூற்று

2ம் பரிசு 300/-
நெவில்ராஜ் டனிற் ஷெரோன்
இல 360, திருஞானசம்மந்தர் வீதி
திருகோணமலை

3ம் பரிசு 200/-
டெலிஷா நெவில்ராஜ்
இல 360, திருஞானசம்மந்தர் வீதி,
திருகோணமலை

**பங்குபற்றிய ஒவ்வொருவருக்கும் நன்றியும் பாராட்டுக்களும்!**

# மறைக்கல்வி கற்போம்

01. கிறிஸ்து அனைத்துலக அரசராக கொண்டாடப்படும் பெருவிழா எப்போது?
கார்த்திகை கடைசி ஞாயிறு

02. திருக்கலங்கள் என்பவை எவை? (திருவழி.புத்)
திருவழிபாட்டைக் (திருப்பலியை) கொண்டாடுவதற்காகப் பயன்படுத்தப்படும் எல்லாக் கலங்களும் திருக்கலங்கள் ஆகும்.

03. திருக்கலங்கள் எத்தனை வகையுண்டு? (திருவழி.புத்)
ஐந்து
நற்கருணைக் கலம், திருப்பலிக் கிண்ணம் (திரு இரத்தக் கிண்ணம்), திருதட்டு, நற்கருணை கதிர் பாத்திரம், நற்கருணை சிமிழ்

04. திருக்லங்களுள் தனிச் சிறப்பு வாய்ந்தவை எவை? (திருவழி.புத்)
திருக் கிண்ணமும் அப்பத் தட்டும் இவற்றில் அப்பமும் இரசமும் ஒப்புக் கொடுக்கப்படுகின்றன. அர்ச்சிக்கப்படுகின்றன.

05. பொதுநிலையினரின் பாதுகாவலர் யார்?
புனித தாமஸ் மூர்

06. EMM என்பதன் தமிழ் சொல் என்ன?
அதிவிஷேட மறைபரப்பு மாதம் (Extraordinary Missionary Month )


07. அதிவிஷேட மாதத்திற்கான சின்னத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறங்களும் அவற்றால் குறிக்கப்படும் கண்டங்களும் எவை?
சிவப்பு - அமெரிக்கா கண்டம்
பச்சை - ஆபிரிக்கா கண்டம்
வெள்ளை - ஐரோப்பா கண்டம்
மஞ்சள் - ஆசியா கண்டம்
நீலம் - அந்தாட்டிக்கா

08. திருத்தந்தை பிரான்சிஸ் 2019 அக்டோபர் மாதத்தை எதனை நினைவு கூற அதிவிஷேட மறைபரப்பு மாதமதாக பிரகடனப்படுத்தினார்?
திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பரால் உலகம் பூராகவும் விசுவாசத்தை வளர்க்க வெளியிடப்பட்ட (Maximum Illud) என்னும் சுற்றுமடலின் 100வது ஆண்டினை நினைவு கூறும் முகமாக

09. வத்திக்கான் இரகசிய ஆவண காப்பகத்தின் பெயரை திருத்தந்தை பிரான்சிஸ் தற்போது எவ்வாறு மாற்றியுள்ளார்?
அப்போஸ்தலிக்க ஆவண காப்பகம் (Oct 28 2019 )

(ஆதாரம் : வத்திக்கான் வானொலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்பிக்கை தரும் கார்த்திகை

கார்த்திகைத் திங்கள் கண்களில் நீர் கோர்த்து, கடந்தகால நினைவலைகள் நிறைந்து பிறப்பினும், நம்பிக்கையைத் தரும் மாதமாகத் திகழ்கின்றது. இம்மாதத்தின் முதல் நாளில், சகல புனிதர்களையும் நினைவு கூர்ந்து அன்னையாம் திருச்சபை விழா எடுக்கின்ற அதே வேளை இரண்டாம் நாள் சகல ஆன்மாக்களையும் நினைவுகூர்கின்றாள். புனிதர்களைமட்டுமன்றி சகல விசுவாசிகளையும் நினைவுகூர்வதானது கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் வாழ்வின் அர்த்தத்தையும் இவ்வுலக வாழ்விற்குப் பின்னான நிலைவாழ்வு பற்றிய நம்பிக்கையையும் தரும் மாதமாக இக்கார்த்திகையாள் திகழ்கின்றாள்.



இயேசுவில் விசுவாசம் கொண்டு அந்த விசுவாசத்திற்கு தம் இறுதி மூச்சுவரை பிரமாணிக்கமாக வாழ்ந்து தம் இன்னுயிரைக் கொடுத்த சகல விசுவாசிகளையும் தமது வாழ்வாலும் வார்த்தையாலும் இயேசுவிற்கு சாட்சி பகன்ற சகலரையும் புனிதர்களாக போற்றிப் புகழுகின்றோம்.

திருமுழுக்கு எனும் திருவருட்சாதனத்தினால் இறைவனின் மக்கள் என அவரது அன்பினால் என்றுமே அழியாத முத்திரை எம் ஆன்மாவில் பொறிக்கப்படும்போது இயேசுவின் சகோதர சகோதரிகளாக திருச்சபையின் அங்கத்தவர்களாக புதுப்பிறப்படையும் நாம் அனைவரும் எமது விசுவாசத்திற்கேற்ப தூய வாழ்வு வாழ அழைக்கப்படுகின்றோம். இந்த தூய வாழ்வில் இறுதிவரை கிறிஸ்துவிற்கு பிரமாணிக்கமாக வாழ்ந்தோரையே நாம் இன்று புனிதர்கள் என்று போற்றுகின்றோம்.

ஆகவேதான், கார்த்திகை மாதத்தின் முதல் நாளில் அனைத்து தூயவர்களையும் நினைவுகூர்ந்து, அடுத்த நாளை சகல ஆன்மாக்களின் திருநாளாக நினைவுகொள்கின்றோம். இந்த ஆன்மாக்களும் இறைவனுக்கு உகந்த முறையில் தம் விசுவாசத்திற்கு சாட்சியம் பகர அழைக்கப்பட்டவர்களே. முதல் நாளில் அனைத்து புனிதர்கள் திருநாளையும், மறுநாளில் சகல ஆன்மாக்களை நினைவு கூர்தலும் ஒன்றோடு ஒன்று மிகவும் தொடர்புடையது. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட நாம் அனைவரும் புனித வாழ்வு வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம் எமது சிந்தனை, சொல், செயல் அனைத்துமே, தூய்மையானதாகவும் இறைவனுக்கு உகந்ததாகவும் இருக்கவேண்டும் என்பதே கிறிஸ்துவின் விருப்பமாகும்.

இதனால்தான் புனிதர்கள் வாழ்வும் அவர்தம் விழாவும், மனிதர் அனைவருக்கும் ஓர் இனிய அழைப்பாக, வாழ்வின் வழிகாட்டலாக திகழ்கின்ற அதேவேளை இறக்கின்ற ஆன்மாக்களை நினைவுகூர்வதானது நாம் நித்திய வீட்டையடைய தூய வாழ்வு வாழ அழைக்கப்படுகின்றதாகவும் அமைகின்றது.

இறப்பிற்க்கு பின் எமக்குண்டானது என்ன என எண்ணி வாடுவோருக்கு, நம்பிக்கைதரும் மாதம் இக்கார்த்திகை மாதம். எமது இறப்பின் பின் எமக்கு கிடைக்கும் சன்மானம், இறைவனுக்குள் நித்திய வாழ்வு எனும் புனிதத்தன்மை. ஆகவே, இறந்தோரை எண்ணி வருந்துவதைவிட, அவர்கள் தம் வாழ்வின் பலன்களால் விட்டுச்சென்ற படிப்பினை என்ன என்று நோக்கி எமது விசுவாசத்திற்கேற்ற நல் வாழ்வு வாழ்ந்து இறைவனுக்கும் மனிதருக்கும் ஏற்புடையோராக, வாழ்ந்து புனிதத்தை அடைய அழைக்கப்படும் மாதமாக இம்மாதம் அமைகின்றது.



இறைபதம் சேர்ந்த எமது பாசத்திற்குரிய உறவுகள் வாழ்ந்த விதம்பற்றி நாம் சற்று சிந்தித்தோமானால், அவர்களது இறுதி ஊர்வலம் எமக்கு நல்ல படிப்பினையைத் தரும். மனிதர் நாம் இவ்வுலகை விட்டுச் செல்லும்போது பொன்னோ பொருளோ எடுத்துச்செல்வதில்லை. மாறாக, மனிதர்களின் மனங்களில் இடம் பிடிப்பதே நாம் சேர்க்கும் பெரும் செல்வம்.

இயேசு கூறியது போல இறைவனை முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு வல்லமையோடும் ஆராதித்து, நம்மை நாம் நேசிப்பது போல எமது அயலவரையும் நேசித்தலினூடாக கிடைக்கின்ற செல்வமே நாம் சேகரிக்கின்ற பெரும் செல்வமாகும். எமது இவ்வுலக செல்வங்களான பணம், பொருள், பட்டம், பதவி, எமது ஆற்றல்கள் அனைத்தாலும் நாம் பிறரின் நலனுக்காக பயன்படுத்துவதினால், அன்பு, இரக்கம், மன்னிப்பு, பகிர்வு, சகிப்பு, பொறுமை, விட்டுக்கொடுத்தல், ஏற்றுக்கொள்ளல், தாழ்ச்சி எனும் விண்ணரசின் விழுமியங்களை எமது அன்றாட வாழ்வில் வாழ்பவர்களாகின்றோம். இதனால் எம் அயலவர்களின் மனங்களை வென்றவர்களாக, மனிதர்களாலும் இறைவனாலும் விரும்பப்படுவர்களாகின்றோம். எம் வானகத் தந்தை எம்மை நோக்கி "நீயே என் அன்பாந்த மகன் / மகள் உன்னில் நான் பூரிப்படைகின்றேன்" எனக்கூறப்பட வாய்ப்புப் பெறுகின்றோம்.

எமது உறவுகள், அயலவர்கள், நண்பர்கள், ஏழை எளியவர்கள் எமது இறுதி ஊர்வலத்தில் பங்கெடுப்பின் கிறிஸ்துவிற்குள் எமது நல்வாழ்விற்க்கு சாட்சிகள் அவர்களே. இந்த செல்வம் மட்டுமே நாம் ஒவ்வொருவரும் இறுதியில் எடுத்துச்செல்லும் பெரும் செல்வமாம். இதனால்தான், இக்கார்த்திகை மாதம் இறைவனடி சேர்ந்த எம்முறவுகளால் அர்த்தமுள்ள மாதமாக, கிறிஸ்துவில் நம்பிக்கை தரும் மாதமாக, நிலைவாழ்விற்க்கு இட்டுச்செல்ல நினைவூட்டும் அற்புதமான, அருள்நிறை மாதமாக இருக்கின்றது.

அன்புடன்,
Sr. Yoga SCJM
Ratnapura.



# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்

## 09. தாழ்வு மனம்

தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள் தங்களைப் பற்றி சிந்திப்பதைவிட. தங்களைப்பற்றி மற்றவர்கள என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். தாழ்வுமனம் உள்ளவர்களிடம் பின்வரும் குணங்கள் இருக்குமென உளவியலாளர்கள் கூறுகிறார்கள்.

1. தனித்திருக்கும் குணம்
2. சுய உணர்வு மிக்கவர்கள்
3. நுண்ணுணர்வு கொண்டவர்கள்
4. எல்லாப் பேச்சையும் தங்களோடு தொடர்புபடுத்திப் பார்ப்பர்.
5. பிறரை அடக்கியாளும் நிலை போன்ற குணங்கள் இருக்கும்.

பெரும்பாலும் தங்களைவிட மற்றவர்கள் முன்னிலையில் கூனிக் குறுகிப் போவார்கள். ஏதாவது காரியம் செய்தால் அது தவறாகிப் பிறருடைய நகைப்புக்கு ஆளாக இருக்க வேண்டுமோவென அஞ்சி எதையும் செய்யாது இருந்து விடுவார்கள்.

இத்தாழ்வு மனப்பான்மை மனிதனுக்குத் திடீரெனத் தோன்றுவதில்லை. குழந்தைப் பருவத்திலிருந்தே ஏற்படுகிறது. பிள்ளை தனது திறமைகளை வெளிப்படுத்த முயலுவது இயற்கையே. அர்த்தமற்ற கட்டுப்பாடுகளை அதற்கு விதிக்கும்போது முயற்சி செய்வதே கூடாது என்கிற எண்ணம் அதன் ஆழ்மனதில் பதிந்துவிடுகிறது. அது செய்யும் முயற்சிக்குத் தண்டனை கொடுக்கும்போது, தன்னுடைய திறமைகளை வெளிப்படுத்துவதே குற்றம் என்கிற நிலையில் தாழ்வு மனம் உருவாகத் தொடங்கும். பெரும்பாலான பிள்ளைகள் பிறரோடு ஒப்பிட்டு, தரம் தாழ்த்தப்பட்டிருந்தால் பிற்காலத்தில் தனது தரத்தைத் தானே தாழ்த்திப் பேசுவான். பெற்றோரால் அல்லது மற்றவர்களால் குழந்தைப்பருவத்தில் புறக்கணிக்கப்படுவது அல்லது கேலிப்படுத்தப்படுவதும் நிகழும். அதைச் செய்யும் போது அது குழந்தையின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்வதில்லை.

தாழ்வு மனம் கொண்டவர்கள் அதிலிருந்து விடுபடுவது எப்படி? தனிமையிலேயே அமர்ந்து இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இந்தக் குணம் அர்த்தமற்றது என்பதையும் உணர வேண்டும். தனது திறமையை வெளிக்கொணர்ந்தால் தோல்வி வந்துவிடுமோ என்று பயப்படுவதைத் தவிர்க்க வேண்டும். முதலில் உங்கள் திறமைகளை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். குழுவில் அபிப்பிராயங்களைப் பயமின்றி வெளிப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். மற்றவர்களோடு பழகும்போது எனக்கும் ஆற்றல்கள் உண்டென ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒருமுறை தோல்வி ஏற்பட்டாலும் முயற்சி செய்ய வேண்டும்.

இன்று பெரிய மேதைகளாக இருப்போர் ஆரம்பத்தில் தோல்வி, கேலிக்கு ஆளாகியவர்களே. ஆனாலும் அவற்றைச் சகித்துக் கொண்டு முன்னேறியவர்களே. ஓரிருமுறை உங்கள் தாழ்வு மனப்பான்மையிலிருந்து நீங்கி மற்றவர்களின் அபிப்பிரயாங்களை அதனால் ஏற்படும் பாதிப்புக்களைச் சந்திக்கத் தொடங்கி விட்டால் துணிச்சல் தானாகவே தோன்றத் தொடங்கும் தாழ்வு மனப்பான்மை என்பது மனநிலையே. இதைச் சுலபமாக மாற்றிக் கொள்ளலாம் என்று எண்ணுங்கள். முயற்சியும் பயிற்சியும் எனக்கிருந்தால் இதிலிருந்து விடுபட முடியும் என எண்ணுங்கள் சுயஅறிவை வளர்த்துக் கொண்டால் தாழ்வுமனப்பான்மை நீங்கி சமநிலை மனப்பான்மை வளரத் தொடங்கும். சுயஅறிவை வளர்க்க அதற்குத் தகுந்தபடியான புத்தகங்களை வாசித்து, கருத்தரங்குகளில் பங்குபற்றி உளவியல் மருத்துவர் அல்லது குடும்ப ஆலோசகரின் உதவியைப் பெற்று சமநிலை மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளலாம்.

**சிந்தனைக்கு...............**


- கீழே விழுவதற்கு முன் எழுந்துவிட முயற்சி செய்
  அது உன் காயங்களைக் குறைக்கும்.
- உணரும் உள்ளம் தான் உண்மையான உள்ளம்
- சிலர் எவ்வேலையும் இல்லாமற் பிறர் வேலையில்
  தலையிடுகிறார்கள். இதுதான் அவர்கள் வேலை.


தொடரும்.........

நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தோர் வாழ்வு ஒளி பெறுக!





இறைஇயேசுவில் பிரியமான சகோத சகோதரிகளே!

இம்மண்ணக வாழ்விலிருந்து பிரிந்து விண்ணகம் சென்ற நம் உறவுகள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களுக்கு மறுமை எப்படி இருக்கின்றது? என்ற பல கேள்விகளுக்கு விடை தெரியாத நிலையில் நாம் அவர்களுக்காகா ஜெபிக்க அழைக்கப்படும் காலமே இந்த நவம்பர் மாதம். மக்கபேயர் புத்தகத்தில் இறந்தோருக்காக பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுப்பது நீதியான செயலாகும் எனக்குறிப்பிடப் படுகின்றது. இந்த நிலையில் இந்த கட்டுரை, இறந்தோரைப் பற்றிய தவறான நம்பிக்கைகளை அகற்றும் நோக்கத்தில் எழுதப் படுகின்றது.

சமீபத்தில் நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் தன் மனைவிக்காக ஜெபிக்குமாறு கேட்டுக் கொண்டார். நான், 'அவருக்கு என்ன தேவை, எதற்காக நான் அவருக்கு ஜெபிக்கவேண்டும்?' என்று கேட்டேன். அவர் தனக்கு தீய சக்திகளின் தொந்தரவுகள் இருப்பதாகவும் அந்த தீய சக்திகளால் தன் மனைவி நோயுற்றிருப்பதாகவும், அதற்காக ஜெபிக்குமாறும் கூறினார். வழக்கமாக எல்லோருக்கும் வரும் ஆர்வம், தீய சக்திகள் என்ற வார்த்தையைக் கேட்டதும் எனக்கும் வந்தது. அவரிடம் அந்தத் தீய சக்திகளைப் பற்றி கூறுமாறு கேட்டேன். அதற்கு அவர் கூறிய செய்தி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவரது மனைவி தான் அவரது குடும்பத்தில் மூத்த பெண். அவருக்கு தற்போது 50 வயதாகிறது. சில ஆண்டுகளுக்கு முன் அவரது தந்தை காலமாகிவிட்டார். அதன் பின், தனக்குச் சேரவேண்டிய சொத்தைத் தருமாறு தாயிடம் கேட்க, தாய் தங்கியிருந்த வீடு இவருடைய பங்காக வந்துவிட, இவர் தன் தாயை அந்த வீட்டிலிருந்து வெளியேறுமாறு கூறிவிட்டார். எனவே அவருடைய தாய், ஒரு குடிசை வீட்டில் தங்கி வாழ்ந்து வருகின்றார். இந்த நிலையில் அவரது உடல்நிலை கொஞ்சம் கொஞ்சமாக மோசமாக ஆரம்பிக்கின்றது. மருத்துவத்தோடு சில குருக்களைச் சந்தித்து ஆசீர்வதிக்கவும் செல்கின்றனர். அதில் ஒரு குரு, 'உங்களுக்கு தீய ஆவியின் தொந்தரவு இருக்கிறது. அதனால் தான் உங்களுக்கு இத்தகைய பிரச்சனைகள் வந்துள்ளன' என்று கூறுகின்றார். அந்தத் தீய ஆவி யாரென்றால், அவரது இறந்த தந்தை தான்! என்பது தான் இதில் வேதனையின் உச்சகட்டம். தான் வாழ்ந்த வீட்டில் தன் மனைவிக்கு இடமில்லாமல் செய்துவிட்டதால் அவர் கோபமாக இருப்பதாகவும், அந்தக் கோபத்தில் அவரது மகளான என் மனைவியை தண்டித்துவிட்டார் எனவும் அவர் கூற எனக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக உணர்ந்தேன். இந்த நிலையில் தன் மனைவிக்காக ஜெபிக்குமாறு அந்த நபர் கேட்ட போது எனக்கு மிகுந்த மனவேதனையாக இருந்தது. பெற்ற மகளே தன் தந்தையை தீய ஆவி என்று சொன்ன கொடுமை வேறு எங்கும் நடக்காது.

உண்மையில் இறந்த ஆத்துமாக்கள் நம்மை துன்பப்படுத்துகின்றனரா? அப்படி நம்மைத் துன்பப்படுத்த அவர்கள் நம்மைப் புரிந்து கொள்ள முடியாதவர்களா? நம்மை முற்றிலும் அறிந்தவர்களானால் ஏன் அவர்களுக்குக் கோபம் வரவேண்டும்? இறந்தபின்னும் அவர்கள் மனித பலவீனத்தில் தான் இருக்கிறார்களா? என்ற சந்தேகங்கள் நமக்கு எழலாம். காரணம், இறந்த ஒரு மனிதனின் ஆவி நடுத்தீர்வைக்காக இறைவனின் திருமுன் சென்றுவிடுகின்றது. நடுத்தீர்வைக்குப் பின் மோட்சத்திலோ நரகத்திலோ உத்தரிக்கும் இடத்திலோ அந்த ஆவி வைக்கப்படுகின்றது என்பதே கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாக இருக்கின்றது. இதையும் மீறி அந்த ஆவி எப்படி உலகத்திலேயே சுற்றிக் கொண்டிருக்க முடியும்?

தன் மனைவியின் தந்தையை தீய ஆவி என்று சொன்ன அந்த நண்பரிடம், 'உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?' என்று கேட்டேன். அவர், 'எனக்கு இரண்டு பெண்பிள்ளைகள், ஒரு ஆண்பிள்ளை, மொத்தம் மூன்று பிள்ளைகள்!' என்றார். 'ஒருவேளை வயதானபின் நீங்கள் இறந்தபின், உங்களையும் தீய ஆவி, அந்த ஆவியை ஓட்ட ஜெப வழிபாடுகள் வைக்க வேண்டும், எனறு உங்கள் மகனோ மகளோ சொல்வாரானால் அதை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா?' என்று கேட்டேன். பெற்ற பிள்ளைகளே இறந்த தன் தந்தைக்குரிய மரியாதையை செய்ய மறுத்தால் அந்தத் தந்தை அவர்களை இந்த உலகில் இவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்ததன் பயன் என்ன?

அன்பார்ந்தவர்களே! இறந்த ஆன்மாக்கள் இறைவனின் முன்னிலையில் இளைப்பாறுகிறார்கள் என்பதே நம் கிறிஸ்தவ நம்பிக்கையாகும். இதில் சிலர், தாங்கள் செய்த தவறுகளுக்காக உத்தரிக்கும் இடத்தில் தண்டனை பெறுகிறார்கள், சிலர் நித்திய நரகத்தில் தள்ளப்படுகிறார்கள் என்பதும் நம் நம்பிக்கை. இந்த விதத்தில் தான், இறந்தவர்கள் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு பெறவேண்டும் என்பதற்காக நாம் திருப்பலி ஒப்புக்கொடுக்கின்றோம், அவர்கள் பெயரால் அன்னதானம் கொடுக்கின்றோம், அவர்களுக்காக சிறப்பு ஜெப வழிபாடுகளைச் செய்கின்றோம். இவை அந்த மனிதரை இந்த உலகிலிருந்து விரட்டுவதற்காக அல்ல, மாறாக அவருக்கு பாவமன்னிப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே. இறந்த ஆன்மாக்களுக்காக நாம் கட்டாயம் ஜெபிக்கக் கடமைப் பட்டுள்ளோம். இதுவே அவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றியாகும். இந்த உலகில் நாம் வாழும் வாழ்வு, நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற மிகப் பெரிய கொடையாகும். அந்த அளப்பரிய கொடைக்காக நாம் அவர்களுக்கு நன்றி செலுத்த இறைவன் நமக்குத் தந்துள்ள ஒரு வாய்ப்பே அவர்களுக்காக ஜெபித்தலாகும். அவர்களுக்காக ஜெபிப்பதற்குப் பதிலாக அவர்களை தீய ஆவிகள் என்று கொச்சைப்படுத்துவது விரும்பத் தகாத ஒன்றாகும். இறப்பு என்பது வாழ்வின் அழிவல்ல, அது விண்ணகப் பிறப்பாகும். இந்த உலகில் அவர்களது பயணம் நிறைவடைந்து விண்ணில் நிலையான வாழ்வுக்கு பிறக்கின்றனர். அவர்களது விண்ணக நிலையை நாம் மதிக்கக் கடமைப் பட்டுள்ளோம். இந்த நவம்பர் மாதம் இறந்தோருக்காக சிறப்பாக ஜெபிக்கும் மாதமாக இருக்கின்றது. நம் குடும்பங்களில் இறந்த நம் சொந்தங்களுக்காக சிறப்பாக இறைவனிடம் இந்த நாட்களில் மன்றாடி அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு பெற்று இறைவனின் திருமுக ஒளியில் இளைப்பாற்றியடைய மன்றாடுவோம்.

நன்றி.

**இறையாசீருடன் அருட்பணி அலெக்ஸ், க. ச**

## உருவாக்கத்தின் மற்றொரு படியாக இடைநிலைக் குருமடம் செல்லும் சகோ. ஜெயசுதனுக்கு வாழ்த்து

நீ உன்னை அறியுமுன்னே
இறைவன் உன்னை அழைத்தார்
நீ உலகில் பிறக்கு முன்னே
கருவில் உன்னைத் தெரிந்தார்
உருக்கொடுத்த உன்னை உருவாக்கி
உள்வத்தில் ஆசையைப் பதித்தார்
கள்ளமில்லா உள்வத்து ஆசை
கரைபுரண்டு வளர ஓதுங்கினாய்
கல்லூரி எனும் வளனார் பதியில்
காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை
காலடி பதித்தாய் சிறியகுருமடம் யோசேவாசில்
பெற்ற அன்னை உற்றார் உறவு விடுத்து
உலகமே சிலுவை தான் எனக்கென்றாய்
சிக்கெனப் பிடித்த கரங்கள் முன்னேற
சிரமேற்கொண்டாய் தடங்கள் பல காண
ஆற்றல்கள் திறமைகள் நிறையவே உன்னிடத்தில்
ஆனாலும் வெறுமையான பணியாளனாய் என்றும்
திகழவே விரும்புகிறேன் என்றாய்
இளைஞனான உன்னிலே இத்தனை தியாகமா
என்னே இறைவனின் கைப்பொம்மையானாய்
இன்னல்கள், இடையூறுகள் எத்தனை வடிவத்தில்
இவையனைத்தும் வென்றிட்டாய் சிலுவை தாள்பணிந்து
இன்றோ புறப்பட்டாய் பெரியகுருமடம் தன்னில்
இனியென்ன நீ குருவாய் நாளை மலர
இறைவன் தாள் பணிகின்றேன் என்றும்
உன் காலடிக்கு அவர் விளக்காய் மாற
உன் கரத்தில் அவர் உடலைத் தாங்கி
திருகாட்சி காணும் இனியநாளை எண்ணி
காலங்கள் பல காத்திருக்கும் கனிவான அன்னை
இறைவன் உன்னைக் காத்திடுவார் - என்றும்
இறைவழி சென்றிட இனிதான வாழ்த்துக்கள்

**ஸ்ரெலா ஜெரோம்**
**புனித திருமுழுக்கு யோவான் ஆலயம், சாம்பல்தீவு**

## கற்றுத் தந்ததில் சிந்திக்க வைத்த சிலுவையின் பதிவு





ஒரு ஆலயம் ஒன்றில் ஒரு பெண் ஒவ்வொரு நாளும் அழுது கொண்டே இருந்தாளாம். ஆண்டவரும் மனமிரங்கி வந்து கேட்டாராம், பெண்ணே உனக்கு என்ன தான் பிரச்சினை? அன்னாளைப் போல ஒவ்வொரு நாளும் அழுது கொண்டிருக்கிறாயே என்று கேட்டாராம். அதற்கு அந்தப்பெண் கூறினாளாம் என்னால் என் குடும்பச் சிலுவையைச் சுமக்க முடியாதுள்ளது என்று கூறினாளாம். ஆண்டவர் மறுமொழியாக அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டாராம். அப்பெண் ஆண்டவரே என்னால் சுமக்கக் கூடிய ஒரு சிலுவையை எனக்குத் தாரும் என்று கேட்டாளாம். ஆண்டவர் அவளை அழைத்துக் கொண்டு போய் சிலுவைகள் நிறைந்த ஒரு அறையைக் காட்டிச் சொன்னாராம் இதில் உன்னால் தூக்கக் கூடிய ஒரு சிலுவையை சுமந்து கொண்டு வா அதையே உனக்கு நான் தருகின்றேன் என்றாராம். அப்பெண்ணும் ஆவலோடு சென்று பார்த்த போது அங்கு தங்க நிறமுடைய சிலுவையும் வெள்ளி, பவளம், வைரம், மரம் என பல வகையான சிலுவைகள் காணப்பட்டது. உடனே தங்க நிறமுடைய சிலுவையைத் தூக்கினாள் அப்பெண். தங்கமென்றாலே பெண்களுக்கு பிரியம் தானே. ஆனால் அதை அவளால் தூக்க முடியவில்லை. ஏன், அசைக்க கூட முடியவில்லை. அதேபோல வெள்ளி, வைரம், பவளம் இவற்றையும் அவளால் தூக்கவே முடியவில்லை. ஏனெனில் அவள் ஒரு ஏழைப்பெண் இறுதியில் மரத்தால் ஆன ஒரு சிலுவையை தூக்கினாள். அதை இலகுவாக அவளால் தூக்க முடிந்தது. ஆண்டவரிடம் கொண்டு வந்து இந்த சிலுவைக்குரிய சுமையை என்னால் சுமக்க முடிகிறது இதையே எனக்குத் தாரும் என்றாளாம். ஆண்டவர் சிரித்துக் கொண்டே கூறினாராம் அடி பெண்ணே இந்தச் சிலுவைக்குச் சொந்தக்காரியே நீ தான், நான் ஒருபோதும் உங்களால் தூக்க முடியாத சிலுவையை உங்களுக்கு தரமாட்டேன் என்றார் ஆண்டவர்.

**சு. கௌசல்யா,**
**இல 216/12,**
**சுடரொளி ஒழுங்கை,**
**பாலையூற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுக நல சேவையில் 90 ஆவது அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் இலங்கை திருச்சிலுவைக் கன்னியர்

சென்ற இதழ் தொடர்ச்சி...........

### 1954ல் குருநகரில் சுகநல நிலையம்

நகரசபையின் வேண்டுகோளிற்கிணங்க குருநகர் மக்களின் சுகநலத் தேவைகளை கவனிக்கவென அருட்சகோதரி ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் வீட்டு தரிசிப்புக்களை நடத்தி மக்களிற்கு சுகநல கல்வியினையும் அளித்து சிறிய நோய்களையும் குணப்படுத்தி சேவையாற்றினார். தற்போது இது கன்னியர் இல்லமாக பேணப்பட்டு வருகின்றது.

### 1960 யாழ்ப்பாணத்தில் அரசாங்க வைத்தியசாலையில் தாதியர் பயிற்சிப் பாடசாலை

ஆரம்பத்தில் இருந்து அன்னை அலோசியா அவர்கள் இளம் பெண்களிற்கு அவசர நிலை தாதிய பயிற்சியினை அளித்து உருவாக்கியிருந்தார். இவ்வாறு உருவாக்கிய தாதியர்கள் 17 பேர் தமக்குரிய நியமனத்தினை 1953ம் ஆண்டு பெற்று இவ்வைத்தியசாலையிலேயே பணியாற்றுவதற்கும் தொடர்ந்து தமது பயிற்சியினை பெறுவதற்குமான நியமனத்தினை பெற்றனர். 1960ல் அருட்சகோதரி பேன்ஹடா தலைமைத் தாதியராக இருந்த போது திருமதி வல்லிபுரம் போதனாசிரியராக பணியேற்றார்.




பிரதம தாதி பேன்ஹாடா
அதியர் திருமதி வல்லிபுரம்



அருட்சகோ. மாக்றெட் மேரி

அப்போது மூன்று வருட தாதிய டிப்ளோமா பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.. தமது இளம் அருட்சகோதரிகளையும் தாதியர் பயிற்சிக்கு அனுப்பலாம் என்ற நம்பிக்கை அன்னைக்கு ஏற்பட்டது. ஆனால் அரசாங்க செயற்திட்டத்தின் படி ஒரு அருட்சகோதரி மட்டுமே முதல் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். ஆயினும் அவருக்குரிய வகுப்புக்கட்டணம் அருட்சகோதரிகளே செலுத்த வேண்டியதாக அமைந்தது. மற்றைய தாதியருக்கு அரசினால் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

துரதிஷ்டவிதமாக 1961 இல் அரசினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி வைத்தியசாலையில் இருந்து அனைத்து அருட்சகோதரிகளும் வெளியேற்றப்பட்டார்கள். இதனால் அருட்சகோதரிகளின் சேவை குறைவடைந்து சென்று இறுதியாக 1963 ஐப்பசியில் இரு அருட்சகோதரிகளுடன் யாழ் அரச வைத்தியசாலையில் அருட்சகோதரிகளின் 25 வருட மகத்தான சேவை நிறைவுற்றது. 1930முதல் 1963 வரையிலான காலப்பகுதியில் சுவிஸ்சலாந்து, ஜேர்மனி, இத்தாலி, அயர்லாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளைச் சார்ந்த 57 மிஷனரி அருட்சகோதரிகள் நான்கு சுகநல நிறுவனங்களில் பணியாற்றினார்கள்.



1963ல் அருட்சகோதரிகளின் பிரியாவிடையின்போது
யாழ். அரச பொது வைத்திய சாலை

### 1958 புனித மைக்கல் தனியார் சுக நல இல்லம் - கொள்ளுப்பிட்டி

அருட்சகோதரிகள் மருத்துவ மனையில் இருந்து அகற்றப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்த காலத்தில் இருந்தே தொலை நோக்குடைய ஆயர் எமிலியானுஸ்பிள்ளை மற்றும் பேராயர் தோமஸ் கூரே ஆகியோர் வாய்ப்புத் தேடிய பொழுதில் அருட்சகோதரிகள் புனித மைக்கல் தனியார் சுக நல இல்லத்தில் பணிபுரிவது சாத்தியமாகிது. ஆனால் வெளிநாட்டு மிஷனரிமார் அரச மருத்துவமனைகளை மட்டுமல்ல நாட்டையும் விட்டு வெளியேற வேண்டும் என்பதை உணரவில்லை. இந்நிலையில் 1963ம் ஆண்டில் சுகாதார பராமரிப்பிற்காக மூன்று தாதிய அருட்சகோதரிகள் மட்டுமே இருந்தனர்.

இக்காலத்தில் மூன்று மிஷனரி சகோதரிகளும் (60 வயதிற்கு மேற்பட்டோர்) மூன்று நித்திய வாக்கு இலங்கை அருட்சகோதரிகளும், 18 தற்காலிக வாக்குத்தத்த அருட்சகோதரிகளும், நான்கு நவசன்னியாசிகளும், இரண்டு ஆரம்ப நிலை பயிற்சி பெறுவோரும் காணப்பட்டனர். இவர்கள் மற்ற பணித்தளங்களில் சேவை செய்யவேண்டி இருந்தது. இந்நேரத்தில் ஆரம்ப காலம் போன்று உருவாக்கல் மற்றும் தொழில்முறைப் பயிற்சியும் முக்கிய உந்துதலாக மாறியது. இளம் அருட்சகோதரிகள் தாதியர்கள், மருந்தாளர்கள் போன்ற பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். இலங்கையிலுள்ள தாதிய பயிற்சி நிலையங்கள் அருட்சகோதரிகளுக்கு மூடப்பட்டதால் சகோதரிகள் பயிற்சிக்காக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். சகோதரிகளின் எண்ணிக்கை மெதுவாக அதிகரித்தமையினால் அவர்கள் தங்கள் சேவைகளை பின்வரும் இடங்களில் ஆற்றினர்.

- புனித மைக்கல் தனியார் சுக நல இல்லம் கொழும்பு 05 1968-1996
- புனித அன்னம்மாள் தனியார் சுக நல இல்லம் மாரவில 1978-1980
- மத்திய தனியார் சுக நல இல்லம் 1980-1982

### 1975 சுவ சேவனா - முகத்துவாரம் கொழும்பு 15

சுகாதார பராமரிப்பு பணியானது வறுமைக்குட்பட்ட மக்களுக்கு சரியான முறையில் போதுமானதாக சென்றடையவில்லை என்பதனை உணர்ந்த போது இதற்கான நுழைவுப்புள்ளியாக கொழும்பு சேரிப்புற பகுதி அமைந்தது. இங்கு உதவித் தாதியர் பயிற்சி, இலவச மருத்துவ உதவி, சத்துணவுத்திட்டம் போன்றன ஆரம்பிக்கப்பட்டு விரைவில் பல்வேறு கிராமங்களுக்கும் பரவியது.

### 2001 முதியவர்களுக்கான பகல் நேர பராமரிப்பு மையம் முகத்துவாரம் கொழு. 15

புதிதாக அமைக்கப்பட்ட இல்லமானது ஆசீர்வதிக்கப்பட்டு தனிமையாக இருக்கும் முதியவர்களின் பகல் வேலை பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது. அவர்கள் இம்மனி நேரத்தில் கைவேலை செய்தும், உணவை தயாரித்துக் கொண்டும், வீட்டை நன்முறையில் பராமரித்தும் தம் பொழுதை செலவழித்தார்கள்.

### 1982 திருச்சிலுவை சுகநல நிலையம் - கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்

1933 முதல் இந்தியாவில் மிஷனரி தாதிய அருட்சகோதரியான ஜேர்மனியைச் சேர்ந்த அருட்சகோதரி எட்முண்டா பவர் கொட்டியம் குயிலோன் திருச்சிலுவை மருத்துவமனையில் 28 ஆண்டுகள் பிரதம தாதியாக சேவையாற்றிய பின் 1982ம் வருடம் மாசித் திங்கள் 27ம் நாள் அருட்சகோதரி இசபெல்லாவுடன் எமக்குரித்தான வைத்தியசாலையொன்றை நிறுவும் சிறப்பு பணி நோக்குடன் இலங்கைக்கு வருகை தந்தார்.



பங்குனி மாதம் 19ம் திகதியன்று கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள மாகாண இல்லத்திற்கு அருகில் சுகநல நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்ட முடிந்தது. பின்னர் அருட்சகோதரி எட்முண்டா அவர்கள் வைகாசி மாதம் முதலாம் திகதி இலங்கை மாகாணத்தின் மூன்றாவது மாகாணத் தலைவியாக நிர்வாகத்தை பொறுப்பேற்றார்.

சுகநல நிலைய கட்டடமானது அனுபவம் நிறைந்த அருட்சகோதரி இசபெல்லாவின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு கார்த்திகை மாதம் 17ம் நாள் திறந்து வைக்கப்பட்டது. மேலும் மருத்துவமனையில் பணியாற்றுவதற்காக அனுபவம் வாய்ந்த தாதியர்களுடன் பிற தனியார் சுக நல இல்லங்களில் பணி புரிந்த சில அருட்சகோதரிகளும் அழைக்கப்பட்டனர். அரச மருத்துவமனைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் திருச்சிலுவை அருட்சகோதரிகளுக்கென ஒரு மருத்துவமனை வேண்டும் என்னும் நீண்டகால விருப்பம் நிறைவேறியது.

திருச்சிலுவை சுகநல நிலையம் தற்போது வழங்கும் வைகள்:

- 24 மணி நேர வெளி நோயாளர் பிரிவு, மருந்தகம், மருத்துவ ஆய்வுகூடச் சேவைகள்
- பெண்களை மையமாகக் கொண்ட பராமரிப்பு - சிறப்பாக பிரசவம் மற்றும் பிரசவம் முன், பின் பராமரிப்பு
- சத்திர சிகிச்சைக்குப்பின் அதிதீவிர பராமரிப்பு
- சிறப்பு குழந்தைப் பராமரிப்பு அலகு, தீவிர சிகிச்சை சிறப்பு பராமரிப்பு பிரிவு
- இதய துடிப்புப் பதிவு, ஊடுகதிர், அல்ட்ராசவுண்ட் ஸ்கான் உள்ளிட்ட வழக்கமான பரிசோதனைகள்
- கிளினிக் - மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேறு பெண்நோய், குழந்தைகள் மற்றும் உடற்பயிற்சி சிகிச்சை

### 1985-2001 சுகாதார பராமரிப்பு "அன்னாஹெய்ம்" - வெலிமட

பதுளை ஒரு மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டவுடன் அப்போது ஆயராக இருந்த வணக்கத்துக்குரிய ஆயர் எட்மண்ட் பெர்னாண்டோ அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அன்னாஹெய்ம் என்னும் சுகாதார பராமரிப்பு மருந்தகம் ஆரம்பிக்கப்பட்டு வெலிமட தேயிலைத்தோட்டங்களில் வாழும் மற்றும் வேலை புரியும் மக்களின் சுகாதார பராமரிப்பு நிலையமாக மாறியது.

### 1989-2009 இடம் பெயர்ந்தவர்களிடையே சுகாதாரப் பாதுகாப்பு

யாழ்ப்பாண தீபகற்பத்தில் மக்கள் இடம்பெயர்வின் போது பல இன்னல்களை அனுபவித்த காலத்தில் திருச்சிலுவை சுகநல பராமரிப்பு நிலையமும் இடம்பெயர்ந்து பூநகரி, வவுனியா, கிளிநொச்சி, பரந்தன், முருங்கன் ஆகிய இடங்களிற்கு தம் சேவையை வழங்கியது.

அக்காலங்களில் பயத்துடனும் ஏக்கத்துடனும் தமது சேவையினை பல்வேறு இடங்களில் வழங்கிய திருச்சிலுவைக்கன்னியர் பின்வரும் இடங்களில் தமது சுகநல பணியினை விரிவுபடுத்தினர்.

தொடரும்.............

நன்றி - அருட்சகோதரி விக்டரின்
திருச்சிலுவைக் கன்னியர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் போட்டி
# இறைவார்த்தைப் புதையல் போட்டி
# புனித லூக்கா நற்செய்தி

- ❖ கீழ்வரும் இறைவார்த்தைகளின் அதிகாரத்தையும் வசனத்தையும் மாத்திரம் எழுதுக.
- ❖ எல்லாரும் பங்கு பற்றலாம்
- ❖ போட்டோப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ❖ ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் இருப்பின் வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01.'மக்களுக்குள் எனக்கிருந்த இகழ்ச்சியை நீக்க ஆண்டவர் என்மீது அருள்கூர்ந்து இந்நாளில் இவ்வாறு செய்தருளினார்'

....................................................................................................

02. நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள், யார் மீதும் பொய்க்குற்றம் சுமத்தாதீர்கள், உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்'

....................................................................................................

03. 'நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம்மாற அழைக்க வந்தேன்'

....................................................................................................

04. வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை, அறியப்படாமலும் வெளியாகாமலும் ஒளிந்திருப்பது ஒன்றுமில்லை

....................................................................................................

05. மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன.

....................................................................................................

06. நான் மற்ற ஊர்களிலும் இறையாட்சியைப் பற்றி நற்செய்தி அறிவிக்க வேண்டும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

....................................................................................................

07. நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்.

....................................................................................................

08.'கலப்பையில் கை வைத்த பின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல'

....................................................................................................

09. 'நீர் இவ்வுதவி செய்வதற்கு அவர் தகுதியுள்ளவரே, அவர் நம் மக்கள் மீது அன்புள்ளவர், எங்களுக்கு ஒரு தொழுகைக் கூடமும் கட்டித் தந்திருக்கிறார்.

....................................................................................................

10. 'என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார்'.

....................................................................................................

11.'எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்து விடாது'

....................................................................................................

12. 'தனக்கு எதிராகத் தானே பிளவபடும் எந்த அரசும் பாழாய்ப் போகும். அவ்வாறே பிளவுபடும் வீடும் விழுந்து விடும்'.

....................................................................................................

13. தம்மைத் தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர்.

....................................................................................................

14. ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர் என நீங்கள் கூறும் நாள் வரும் வரை என்னைக் காணமாட்டீர்கள் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

....................................................................................................

15. 'வழியிலே அவர் நம்மோட பேசி, மறைநூலை விளக்கும் போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?'

....................................................................................................

16. என் ஆட்சி வரும் போது நீங்கள் என்னோடு பந்தியில் அமர்ந்து உண்டு குடிப்பீர்கள் இஸ்ரயேலின் பன்னிரு குலத்தவருக்கும் தீர்ப்பு வழங்க அரியணையில் அமர்வீர்கள்.

....................................................................................................

17. மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்துக் கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என உங்களுக்குச் சொல்கிறேன்.

....................................................................................................

18. அவர்கள் மலைகளைப் பார்த்து 'எங்கள் மேல் விழுங்கள்' எனவும் குன்றுகளைப் பார்த்து. எங்களை மூடிக் கொள்ளுங்கள் எனவும் சொல்வார்கள்.

....................................................................................................

19. கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார். நீங்கள் உங்களை மக்கள் முன் உயர்ந்தவர்களாக காட்டிக் கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும்.

....................................................................................................

20.நீங்கள் மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்

....................................................................................................

21.நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள் உங்களுடைய சகோதர் சகோதரகளுள் ஒருவர் பாவம் செய்தால் அவரைக் கடிந்து கொள்ளுங்கள் அவர் மனம் மாறினால் அவரை மன்னியுங்கள்.

....................................................................................................

22. கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று.

....................................................................................................

23. செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது' என்றார்.

....................................................................................................

24. 'இவர்கள் பேசாதிருந்தால் கற்களே கத்தும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்'.

....................................................................................................

25. உடலின் எப்பகுதியிலும் இருளின்றி உங்கள் உடல் முழுவதும் ஒளியாய் இருந்தால், விளக்குச் சுடர்முன் நீங்கள் ஒளிமயமாய் இருப்பது போல் அனைத்தும் ஒளிமயமாய் இருக்கும்

....................................................................................................

பெயர் : ....................................................................................
பங்கு : ....................................................................................
முகவரி: ....................................................................................
....................................................................................

முடிவுத்திகதி : 15. 12. 2019

## கண்டு பிடிக்கவும்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி | போ | மி | கோ | ம் | க | ச | வா | ப | னு |
| தி | ரு | ப் | ப | லி | நி | ஈ | க | ல் | தே |
| னி | ஜ | ப் | வ | வை | ட் | ஒ | ட | ல | ஸ் |
| வா | அ | கி | பு | வ் | லு | பா | று | வி | த |
| மி | கை | ச | ம் | க | து | சி | சு | ம் | சு |
| கா | உ | ச | மா | ந் | ழ் | எ | ச் | அ | பூ |
| ஜ | ர | ஞா | ரு | தா | மு | மா | வே | ரு | ப் |
| இ | அ | வி | நூ | வி | ன | ஆ | லை | யி | தி |
| அ | ரு | ள | டை | யா | ள | ம் | டு | டா | று |
| தி | ரு | மு |ழு | க் | கு | உ | க | பூ | உ |

கீழ் காணும் கட்டத்தில் திருவழிபாடு சம்மந்தப்பட்ட சில சொற்கள் இருக்கின்றன. இவை எவை என்று இந்த ⬭ அடையாளத்தின் மூலம் குறிப்பிடுக. விடையைத் தனியாகவும் எழுதவும்.

01. ........................................ 09. ........................................
02. ........................................ 10. ........................................
03. ........................................ 11. ........................................
04. ........................................ 12. ........................................
05. ........................................ 13. ........................................
06. ........................................ 14. ........................................
07. ........................................ 15. ........................................
08. ........................................

முடிவுத்திகதி 15.12.2019

- ❖ எல்லாரும் பங்கு பற்றலாம்
- ❖ போட்டோப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ❖ ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் இருப்பின் வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-


பெயர் : ....................................................................................
பங்கு : ....................................................................................
முகவரி: ....................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றியவர்கள் : 44 பேர்

மிகச் சரியாக விடையளித்தோர் : 18 பேர்

## பரிசுக்குரியவர்கள்



1ம் பரிசு 500/=
ஜ்லியஸ் அனஸ்டயானா
4ம் ஒழுங்கை, பெரியகுளம்,
சாம்பல்தீவு

2ம் பரிசு 300/=
வெ. பெனடிக்ஷன்
5ம் வட்டாரம்,
கும்புறுப்பிட்டி

3ம் பரிசு 200/=
நிரஞ்சினி சொமிபாலா,
71ச பாரதி வீதி,
திருகோணமலை
பேராலயம்

## பாராட்டுக்குரியவர்கள்

01. சு. பகீரதன் - அன்புவழிபுரம்
02. லொரன்சி றன்சியா - சாம்பல்தீவு
03. ஜெ. ஷெனுவ் - மூதூர்
04. S. கயானி - அன்புவழிபுரம்
05. M. யுவான் கொமி - உவர்மலை
06. தனுஜா போல் - பாலையூற்று
07. திரேசா சேவியர் - பேராலயம்
08. J. டிலுக்ஷிக்கா - அலஸ்தோட்டம்
09. புஸ்பா சேவியர் - உவர்மலை
10. தே. சமில்டன் - நிலாவெளி
11. P. பிரவீன் கோர்டன் ஸ்மித் - உவர்மலை
12. அ. தர்சிமேரி - பேராலயம்
13. M. யஸ்மின் - பேராலயம்
14. ம. க.்பினா - பேராலயம்
15. K. கிறிஸ் யஸ்வின் - செல்வநாயகபுரம்




# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 33
# கொலோசையர் அதி 1 - 4 வரை
## முடிவுகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | | வா | ழ் | வு | | | ல் | | ம |
| டை | | | ம | | ஒ | தி | யி | ள் | கி |
| ப் | ஓ | | றை | ம் | ளி | ரு | ணி | க | ழ் |
| ப | ய் | பு | பொ | டு | ம | த் | ப | ர் | ச் |
| னை | வு | ற் | ரு | போ | ய | தொ | து | தீ | சி |
| த் | நா | வே | ளா | ப் | மா | ண் | ர | சா | கொ |
| து | ள் | ர | கி | ழி | ன | ட | வ | பே | ள் |
| க் | | வ | ய | வி | | ர் | ட | ய் | கி |
| கு | | | மை | ழ் | தா | | ண் | பொ | றே |
| ம் | ந | ல் | லெ | ண் | ண | ம் | ஆ | | ன் |


01. ஆண்டவரது பணியில்
02. திருத்தொண்டர்
03. வாழ்வு
04. ஓய்வு நாள்
05. நல்லெண்ணம்
06. ஒளிமயமான
07. பொய் பேசாதீர்கள்
08. தாழ்மை
09. விழிப்போகும்
10. மறைபொருளாகிய
11. மகிழ்ச்சி கொள்கிறேன்
12. வரவேற்பு
13. படைப்பனைத்துக்கும்

# சிறுவர்களுக்கான போட்டி
## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்

01



02



- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறம் தீட்டி வித்தியாசங்களை கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=

பெயர் ........................................................................

முகவரி ......................................................................

பங்கு ........................................................................

தரம் .........................................................................

முடிவுத் திகதி 15.12. 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 | 17 |
| 07 | 11 |
| 1926 | 2018 |

## அமரர் பிரான்சினா டேவிட்

"உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை
கொள்பவன் இறப்பினும் வாழ்வார்" யோவா 11:25

**அல்லும் பகலும் உறங்காது**
**இன்பம் போன்று துன்பத்தையும் தாங்கி**
**எம்மை வாழ வைத்த தெய்வமே - அம்மா**
**இம்மண்ணை விட்டு நீங்கள் சென்றாலும்**
**எமது நெஞ்சங்களில் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும்**
**உங்கள் ஆன்மா இறையடி சேர**
**தினமும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.**

குடும்பத்தினர்
125, உட்துறைமுக வீதி,
உவர்மலை
திருகோணமலை.
தொ.இல. 026-2220238

# அதிவிஷேட மறைபரப்பு மாதத்தை முன்னிட்டு நடைபெற்ற நற்கருணை ஆசீர்






அதிவிஷேட மறைபரப்பு மாதத்தை முன்னிட்டு திருகோணமலை மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து அருட்பணியாளர்கள், துறவியர் மற்றும் கத்தோலிக்க நிறுவனங்களுக்கான நற்கருணை ஆராதனை 08.10.2019 செவ்வாய்க்கிழமையன்று மறைமாநில ஆயர், குருமுதல்வர் தலைமையில் இடம்பெற்றது. நற்கருணை ஆண்டவரோடு செலவிட்ட சில மணி நேரங்கள் அர்த்தமுள்ள அர்ப்பணமான பணிக்கு பலம் சேர்த்ததை கலந்து கொண்டவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

# மறைமாவட்ட செபமாலைப் பேரணி

மேற்படி மறைமாவட்ட செபமாலைப் பேரணி கடந்த 26ம் திகதி சனிக்கிழமையன்று காலை 7.15 மணியளவில் மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், திருகோணமலை – நிலாவெளி மறைக்கோட்ட முதல்வர், அருட்பணியாளர்கள் தலைமையில் கும்புறுப்பிட்டி புனித சவேரியார் ஆலயத்திலிருந்து குச்சவெளி செபமாலை அன்னை ஆலயத்தை நோக்கி பேரணி ஆரம்பமாகி 11.15 மணியளவில் ஆலயத்தை வந்தடைந்தது. தொடர்ந்து ஆயர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த செபமாலைப் பேரணியில் மறைமாவட்டத்தின் பல பங்குகளிலிருந்தும் இறைமக்கள் கலந்து ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். இதற்கான ஆயத்தங்கள் அனைத்தையும் நிலாவெளி மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. இ. யூட் சர்வானந்தன் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். அவரோடு இணைந்து ஆயத்தங்களை மேற்கொண்ட நிலாவெளி மறைக்கோட்ட அருட்பணியாளர்கள். இறைமக்கள் அனைவருக்கும் எமது நன்றிகளையும் இறையாசீரையும் தெரிவித்து நிற்கின்றோம்.

**தகவல் : மறைக்கோட்ட முதல்வர்,**
**அருட்பணியாளர் இ. யூட் சர்வானந்தன்.**







# சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலய மறைபரப்பு மாத இறுதி நாள் சிறப்பு









அக்டோபர் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி இ. யூட் சர்வானந்தன் அடிகளாரின் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. சிறப்பு விருந்தினராக அருட்பணி. X.I. றஜீவ அடிகளார் வருகை தந்திருந்தார். அத்தோடு குருமட மாணவர்கள் மற்றும் அனைத்து பங்கு மக்களும் கலந்து கொண்டனர். அன்றைய நாளிலே அன்பியங்கள் ஒவ்வொன்றும் தமது பெயர் கொண்ட புனிதரைப் பற்றிய நிகழ்ச்சிகளை செய்திருந்தனர். அத்தோடு எமது பங்கிலே மறையாசிரியர்களாக 25 ஆண்டுகள் பணியாற்றி வரும் செல்வி. கத்தரின் மரிய ஜொனத்தன், செல்வி. லூர்துராஜா ஜெபமணி ஆகியோர் கௌரவிக்கப் பட்டு அவர்களை பங்கு மக்கள் அனைவரும் வாழ்த்தினர். அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றன. இந்நிகழ்விற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org